
# கண்ணதாசன்

தரும்

# குடும்ப சூத்திரம்



# வாசல்

நீண்ட காலமாக இந்திய மக்களால் படிக்கப்பட்டு வரும் காம நூல்களில் முக்கியமானது வாத்ஸ்யாயனரின் காம சூத்திரம்.

தமிழ் மக்களிடையே பிரபலமானது, அதிவீர ராம பாண்டியனின் கொக்கோகம்.

அவ்வளவு பிரபலமாக ஆகாவிட்டாலும் செம்மையாக அமைந்தது, ஆதிசங்கரரின் மதன நூல்.
வழிநூல்களாக ஏராளமான நூல்கள் வந்தாலும், இவையே மூல நூல்கள்.

வழக்கம்போல் பரமன் பார்வதிக்குச் சொன்னதாகவும், அதை நந்திதேவர் கேட்டதாகவும், அவர் சனற்குமாரனுக்குச் சொன்னதாகவும், சனற்குமாரன், சப்த ரிஷிகளுக்குச் சொன்னதாகவும், வடமொழி நூலின் முன்னுரை கூறுகிறது. அதை நான் கவிதையிலும் குறிப்பிட்டுள்ளேன்.

எது எப்படி இருப்பினும், 'காம சூத்திரத்தை' ஆக்கியவர்கள் முனிவர்கள்தான் என்பது உறுதி.

ஆகவே தான் கோயிற் சிற்பங்களையும் குகை ஓவியங்களையும் ஆக்கியவர்கள் இந்தச் சூத்திரங்களையே உதாரணமாகக் கொண்டார்கள்.

இவற்றுள் மதன நூல் என்பது ஆதி சங்கரர் இயற்றியதல்ல' என்ற வாதம் பிற்காலத்தில் எழுந்தது.

'ஒரு அத்வைத ஞானி காமநூல் எழுதுவாரா?' என்பதே அந்த வாதத்திற்கு அடிப்படை.

இந்தக் காம நூல் காட்டுவது, 'கோபன் ஹேகன் லீலா விநோதங்கள்' அன்று. இல்லற வாழ்க்கையைச் சாரமுள்ளதாக்க ஞானிகள் செய்த முயற்சிகளே இவை. ஆகவேதான் இவற்றைத் தமிழ்ப் படுத்தவும், வரிசைப் படுத்தவும் நான் முயன்றேன்.

நான் படித்தவை முழுவதையும் இதிலே தரவில்லை. வெறி பிடித்த நிலைகளை விலக்கிவிட்டு, முறையானவற்றை மட்டுமே தொகுத்திருக்கிறேன்.

'வசியம்' செய்தல், 'வாசனை பூசுதல்', போன்ற விஷயங்கள் அப்படியப்படியே தரப்படுகின்றன. நவீன உலகத்துக்கு இவை எவ்வளவு பொருந்துமோ எனக்குத் தெரியாது.

காம சூத்திரப்படி பெண்மை மூன்று வகையாகக் கூறப்படுகிறது. அதுவும் பெண் குறியின் அளவை வைத்தே கூறப்படுகிறது. (வாத்ஸ்யாயனர்.) இதிலேயே நான் எடுத்தாண்டுள்ள மின்னொரு நூலில், 'பாலை, தருணி, பிரவிடை, விருத்தை' என்று நான்கு வகைகளாகப் பருவங்களைக்கொண்டு குறிப்பிடப்படுகிறது.

சாமுத்திரிகா லட்சணத்தில், 'அத்தினி, சித்தினி, பத்மினி, நந்தினி' என்று, பிறப்பு, உருவம், யோனி ஆகியவற்றை வைத்து நான்காகப் பிரிக்கப் பட்டிருக்கிறது.

தமிழ் கூறும் வகைகளோ, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழுவகைகளாகும்.

இவற்றை விவரிக்க இந்த இடத்தை எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை.

நான் எடுத்துக் கொண்ட நூல்கள் சொல்லும் விவரங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன்.

அடுத்து, வைத்திய சாஸ்திர முறைக்கு இவையனைத்தும் ஒத்துவரும் என்று காம நூல்கள் விவரிக்கின்றன.

நவீன உலகின் மாறுபட்ட சூழ்நிலையிலும், இவை பொருந்தும் என்றே நான் நினைக்கிறேன்.

1890-ல் யாழ்ப்பாணத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட ஒரு புத்தகம், எல்லா வகையான காம நூல்களையும் திரட்டிக் கொடுத்திருக்கிறது. அதுதான் இந்தக் 'குடும்ப சூத்திரத்து'க்கு அடிப்படை. இதில் வரும் 'மகாகுண பாடம்' என்ற பகுதியும் அதில் இருந்து எடுக்கப்பட்டதுதான்.

சர்ச்சைக் குரிய விஷயங்கள் ஏதாவது இதில் இருக்குமாயின், அந்தச் சர்ச்சையில் நிற்க வேண்டியவர்கள் எனக்கு முன்னால் இவற்றை எழுதியவர்களைத் தவிர, நானல்ல.

மொத்தத்தில் உடல் உறவு சம்மந்தப்பட்ட விஷயங்களை இளைஞர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்று மறைப்பது மடத்தனமானது. அதன் விளைவாகவே பல குடும்பங்கள் பாழ் பட்டுப் போயிருக்கின்றன.

உடல் உறவை விளக்கிக் கூறி, விலைமாதர் உறவை வெறுக்க வைப்பதன் மூலம், நல்ல குடும்பங்களை உருவாக்க முடியும்.

இதை எழுதியது பற்றி நான் வருந்தவில்லை; மாறாக மகிழ்ச்சி அடைகிறேன். எனது அர்த்தமுள்ள இந்து மதம் வரிசையில் இதையும் ஒன்றாகவே கருதுகிறேன்.

நாளடைவில் வேறு நூல்கள் கிடைக்குமானால் மேலும் இதனை விரிவு படுத்துவேன்.

வழக்கம் போல் இதனை அழகாக நான் சொல்லச் சொல்ல எழுதித் தொகுத்த என் தம்பி இராம. கண்ணப்பனுக்கும் அழகாக அச்சிட்ட நாதன் அச்சக நண்பர்களுக்கும் என் நன்றி.

இந்த குடும்ப நூலகம் எனது சொந்த நூலகமாகும். எனது குழந்தைகளின் எதிர்காலத்துக்காக ஆரம்பித்த நூலகம்.

அன்பன்

கவிதா
சென்னை-18
15-9-1977

கண்ணதாசன்



எல்லாக் குடும்பங்களிலும் அமைதியும் ஆனந்தமும் ஆரோக்கியமும் வளர, எல்லாம் வல்ல கண்ணன் அருள்புரிவானாக.

— கண்ணதாசன்

# பகுதி ஒன்று

# கண்ணதாசனின்

# அனுபவ சூத்திரம்



காதல் என்பது கண்களின் தொடக்கம்
சோதனை வேதனை தொடுத்திடும் அம்பு!
மோதும் பசியும் மூனும் காதலும்
இல்லா விடிலோ இவ்வுல கில்லை!

குழந்தை வளர்ந்து கும்மி யடித்து
பருவம் எய்திப் பக்குவ மடைவதை
கண்கள் தாமே காட்டுவ முதலில்!

அங்கம் கிளர்ந்து ஆசை பெருகி
பொங்கும் மயிர்க்கால் பூரித் தெழுந்து
தன்னை மறந்து தன்வச மிழந்து
மர்மக் குறியில் மயக்கம் நிறைந்து
தூக்கம் கலைந்து துடிப்பு வளர்ந்து
ஏக்கம் பெருகும் இளமை வயதில்
ரத்தம் புதிது; ரகசியம் புதிது;
சித்தம் புதிது; சிந்தனை புதிது;
முத்தம் புதிது; மோகம் புதிது;
கட்டித் தழுவும் கற்பனை புதிது;
கொள்ளை அழகும் கொங்கை வனப்பும்
காணக் காணக் கலக்கும் வயது!

அழகோ இல்லையோ அதையும் தேடி
பழகச் சொல்லும் பருவத் துடிப்பு!
இனந் தெரியாமல் இழுக்கச் சொல்லும்!
குணந் தெரியாமல் குலவச் சொல்லும்!
மணமில் லாமலே மகிழச் சொல்லும்!
பணத்தைக் கொடுத்துப் பசியைத் தீர்க்கும்!

காட்டுப் புறமோ கடற்கரை மணலோ
குளிக்கும் இடமோ கும்பிடும் அறையோ
சமைக்கும் துறையோ சாப்பிடும் தரையோ
எந்த இடத்தும் இன்பம் காணும்!
காலைப் பொழுதோ கடும்பகல் தானோ
அந்திப் பொழுதோ அர்த்த சாமமோ
எந்தப் பொழுதென எண்ணா திருக்கும்!
இளையாள் முதியாள் எனப்பா ராது!
உடல்கெட் டவள்பால் உறவும் கொள்ளும்!

காமன் வழங்கும் கவலைகள் ஒன்றா?
தரத்தைக் குலைத்துத் தன்மையைக் குலைத்து
நிறத்தைக் கெடுத்து நினைவையும் அழித்து

செய்யும் தொழிலையும் செய்யா தாக்கி
காமக் குரங்கெனக் கண்டோர் இகழ
மாமணி வாழ்வை மண்ணில் வீழ்த்தும்!

பருவம் வந்ததும் பாடம் படித்து
உருவம் பார்த்து உள்ளமும் பார்த்து
குலமும் பார்த்துக் குணமும் பார்த்து
காதல் செய்தோ கடமைப் படியோ
கல்யா ணம்எனக் கட்டி முடித்து
வாழும் வாழ்வே வளம்பெறும் வாழ்வு!

எத்தகு பெண்ணை ஏற்கலாம் இளைஞன்?
காதல் என்பதைக் கண்ணால் மட்டும்
கூறும் பெண்ணே குலத்துக் கேற்றவள்!
பாதிக் கண்ணால் பார்க்கும் அழகி
நீதிப் படியே நிலத்தைப் பார்ப்பவள்
பல்தெரி யாமல் மையச் சிரிப்பவள்
முந்தா னைதனை முழுக்க மறைத்தவள்
நீண்ட கூந்தல் நிறையப் பெற்றவள்
மல்லிகை முல்லை மலர்சூ டுபவள்
சாந்துப் பொட்டைத் தானணி கின்றவள்
நடுவகி டெடுத்த நங்கையர் திலகம்
இவளே, கற்பின் இல்லறப் பெண்மை!

நீண்ட கழுத்தும் நெருங்கிய காதும்
கூரிய மூக்கும் குனித்த புருவமும்
தாடை சற்றே சரிந்த நிலையும்
தன்கை இரண்டும் சதிரா டாமல்
முன்கை வளையலை மூடியும் இழுத்தும்
நாணிக் கவிழும் நங்கை சிறந்தவள்!

அத்தகு பெண்ணை அடைய விரும்பும்
காதல் மனதுக் காளையர் எவரும்
கடிதம் எழுதிக் கலவரம் செய்தால்
காலகா லங்கள் கடிமண மில்லை!

திருமண வீட்டில் திருவிழாக் கடையில்
சந்நிதி வாசலில் சமுத்திரக் கரையில்
விரும்பும் நண்பர் வீடுகள் நடுவில்
காய்கறிக் கடையில் காணும் போது
கவனத் துடனே கண்ணிய மாக
அவளைக் கவரும் அமைதி படைத்து
மெதுவாய்ப் பேசி மெதுவாய் நடந்து
அடிக்கடி புதிய ஆடைகள் அணிந்து
ஏற்றிய விளக்கை இன்றும் நாளையும்
எண்ணெய் ஊற்றி எரிப்பது போல
காத்துக் கிடந்தால் காரிகை பணிவாள்!

தன்னை அடக்கும் தனிக்குணம் எனக்கு
உண்டென் பதனை உளத்தில் படும்படி
கட்டுப் பாடாய்க் காத்திருந் தால்தான்
வெண்ணெய் உருகும் பெண்மை மருகும்!

பூவையின் உள்ளம் பொங்கும் வரையில்
காளையின் உள்ளம் கம்பிச் சிறையில்
அடைந்து கிடந்தால் அடைவது நிச்சயம்!

கண்ணும் கண்ணும் கலந்திடும் போது
கடித்துத் தின்பது போல்பா ராது
அமைதிப் பார்வை அன்புப் பார்வை
காவியப் பார்வை பார்ப்பது காதல்!

கெண்டை விழியில் கேள்விகள் உண்டு;
பருவக் கண்களில் பதிலும் உண்டு!
எழுத்தில் லாமலே எழுதும் கவிதை
காகித மின்றிப் பாடிடும் காவியம்!
அந்தப் பார்வையில் அன்பைச் சொல்லலாம்
காலம் சொல்லலாம்; கவலை சொல்லலாம்;
பிரிவைச் சொல்லலாம்; பிணக்கைச் சொல்லலாம்
நேரம் சொல்லலாம்; நினைவைச் சொல்லலாம்;
நாளை வாவெனத் தவணையும் தரலாம்!

நற்குலப் பெண்ணுடன் நாளும் நாளும்
இப்படி வளரும் இணையிலாக் காதல்
கைப்பிடி முடிந்து கட்டிலில் வரும்நாள்
வாத்ஸா யனர்க்கே வகுக்கலாம் சூத்திரம்!

எந்தப் பெண்ணை ஏற்கலா காது?
விடியா விடிய வீட்டின் வாசலில்
நின்றுகொண் டிருப்பவள் நிம்மதி கெடுப்பாள்.
விழித்து விழித்து வீதியைப் பார்ப்பவள்
பழிக் கஞ்சாத பாவையாய் இருப்பாள்.
ஆடவர் தம்மை ஆசை வழிய
உற்றுப் பார்ப்பவள் உணர்ச்சி நெருப்பு.

தன்னைப் பார்ப்பவர் யாரா னாலும்
தானும் பார்ப்பவள் தரமிலா நங்கை!
வலியச் சென்று வாலிபர் தம்மை
பேச்சுக் கிழுப்பவள் பெண்ணிலே கடை!

ஆண்கள்கூட் டத்தில் அதிகம் இருந்து
பழகி மகிழ்பவள் பத்தினி யல்ல!
பெற்றோர் சொல்லைப் பேணா தொழிந்து
களியாட் டங்களில் கலந்து கொள்பவள்
குடும்ப வாழ்க்கையைக் கொடுநர காக்குவாள்!
பிறந்த குலத்தின் பெருமையை மறந்து
இறந்த மார்புடன் திரிந்திடும் பேதையர்
என்றும் எங்கும் எவர்வந் தாலும்
திறந்த வீடுபோல் திறந்தே கிடப்பர்!
எந்தப் பரிசை எவர்கொடுத் தாலும்
பெற்றுக் கொள்ளும் பேதையர் ஒருநாள்
காசுக் காசுவே கற்பை இழப்பர்!

கோணல் வகிடு கொண்டவள் நடத்தை
கோணல் மாணலாய் குறுக்கே செல்லும்.
குட்டைக் கழுத்தும் குவிந்த கொங்கையும்
சப்பைக் காலும் சரசப் பேச்சும்
சண்டை யிடுங்கால் தரமிலா வார்த்தையும்

ஆடவர் முன்னே ஆடும் குணமும்
கைகளை வீசிக் கலக்கும் நடையும்
பாதி ரவிக்கையும் படைத்தவள் அவளே,
ஆதிகா லத்து அரக்கரின் வம்சம்!
திருமணப் பெண்ணை தேர்ந்தெடுப் பதிலே
எவ்வழி செல்வது இன்பம் என்று
கற்றவை யெல்லாம் கறந்து கொடுத்தேன்
அனுபவப் பட்டதை அளந்து கொடுத்தேன்!
பழங்கா லத்துப் பாரத நாட்டின்
திருமண முறைகளைச் செப்புவேன் இங்கே!

மகா பாரத இதிகா சத்தில்
பாண்டு மன்னனும் பத்தினி குந்தியும்
தனியே இருந்து சரஸம் புரிந்தார்.
'மன்னர் மன்னவ, மணமுறை எத்தனை?
கூறுக!' என்றே கேட்டனள் குந்தி.
'பலவித கணவர்; பலவித தாரம்;
எதையும் அந்நாள் ஏற்றது உண்டு!
ஆனால் எனது அன்புடைக் குந்தி!
ஒருவன் ஒருத்தி உத்தம வாழ்வை
ஸ்வேத கேதுவே சொன்னார் முதலில்'
என்றான் பாண்டு. ஏற்ற மணமுறை
பலப்பல என்றே பாண்டு சொன்னானே.
அதனை இங்கே அடுக்காய்ச் சொல்லுவேன்!

எதிரியின் மகளை இரவோ பகலாய்
கடத்திச் சென்று கட்டிலில் போட்டு
அனுபவிக் கும்முறை அப்போ திருந்தது!
'ராட்சத மண'மென நவில்வார் அதனை!
இணங்கா தவளை இணங்கச் செய்திட
தூங்கும் போதோ சோர்ந்த நிலையிலோ
மதுவைக் கொடுத்து மயங்கச் செய்தோ
மாலை சூட்டிடும் மணமொன் றுண்டு.
'பைசாச மண'மெனப் பகருவார் அதனை.

காதல் இருவர் கருத்தொரு மித்து
தாயும் தந்தையும் சம்மதிக் காவிடில்
ஆலயங் களிலோ அடுத்தவர் வீட்டிலோ
தனியே இருந்து தாலியைக் கட்டி
மாலைசூடி மகிழும் மண முறை
'காந்தர்வ மண'மெனக் கூறுவர் பெரியோர்.
சடங்குக ளின்றிச் சாத்திர மின்றிக்
கட்டும் மணமே காந்தர்வ மணமாம்!


ரகசியத் திருமணம் என்பது ஒன்று!
காந்தர்வம் போல்இது காட்சி தந்தாலும்
அக்கினி சாட்சி அவசியம் வேண்டும்!
உற்றவர் இன்றி உறவின ரின்றித்
திருமணம் செய்யும் புதுமண மக்கள்
அந்தணர் வீட்டில் அக்கினி எடுத்து
தர்ப்பைப் புல்லைத் தரையில் பரப்பி
குடும்ப முறைப்படி ஓமம் செய்து
அக்கினி தன்னை அழகாய் மும்முறை
வலம்வர வேண்டும்; வந்தபின் ஐலே
பெற்றோர் அறிந்தால் பிழைஎதுமில்லை
சட்டப் படி-அது சாத்திரத் திருமணம்!

பிழை எனச் சொல்லிப் பிரிக்க வொண்ணாது
இவையெல் லாமும் இருப்பினும் கூட
தன்னைப் பெற்றோர் சம்மந்தி வீட்டில்
பெண்ணைப் பார்த்துப் பிடித்தது சொல்லி
நிச்சயம் செய்து வெற்றிலை வைத்து
காலம் நேரம் கணக்காய் வகுத்து
தட்டார் கையில் தட்டிக் கொடுத்து
ஊரை அழைத்து உறவை அழைத்து
மேளம் தாளம் விருந்துகள் வைத்து
கோலா கலமாய் கொள்ளும் திருமணம்
இறைவன் வீட்டு இன்பத் திருமணம்!
இளமை அதனை ஏற்பதே நன்று!

காதல் இருவர் கருத்தொரு மித்து
தாயும் தந்தையும் சம்மதிக் காவிடில்
ஆலயங் களிலோ அடுத்தவர் வீட்டிலோ
தனியே இருந்து தாலியைக் கட்டி
மாலைசூடி மகிழும் மண முறை
'காந்தர்வ மண'மெனக் கூறுவர் பெரியோர்.
சடங்குக ளின்றிச் சாத்திர மின்றிக்
கட்டும் மணமே காந்தர்வ மணமாம்!

ரகசியத் திருமணம் என்பது ஒன்று!
காந்தர்வம் போல்இது காட்சி தந்தாலும்
அக்கினி சாட்சி அவசியம் வேண்டும்!
உற்றவர் இன்றி உறவின ரின்றித்
திருமணம் செய்யும் புதுமண மக்கள்
அந்தணர் வீட்டில் அக்கினி எடுத்து
தர்ப்பைப் புல்லைத் தரையில் பரப்பி
குடும்ப முறைப்படி ஓமம் செய்து
அக்கினி தன்னை அழகாய் மும்முறை
வலம்வர வேண்டும்; வந்தபின் ஒலை
பெற்றோர் அறிந்தால் பிழைஎதுமில்லை
சட்டப் படி-அது சாத்திரத் திருமணம்!

பிழை எனச் சொல்லிப் பிரிக்க வொண்ணாது
இவையெல் லாமும் இருப்பினும் கூட
தன்னைப் பெற்றோர் சம்மந்தி வீட்டில்
பெண்ணைப் பார்த்துப் பிடித்தது சொல்லி
நிச்சயம் செய்து வெற்றிலை வைத்து
காலம் நேரம் கணக்காய் வகுத்து
தட்டார் கையில் தட்டிக் கொடுத்து
ஊரை அழைத்து உறவை அழைத்து
மேளம் தாளம் விருந்துகள் வைத்து
கோலா கலமாய் கொள்ளும் திருமணம்
இறைவன் வீட்டு இன்பத் திருமணம்!
இளமை அதனை ஏற்பதே நன்று!



ஆண் பெண் உறவின் அந்தரங்கத்தை
பாடம் படித்துப் பக்குவம் பெறுவது
பண்டைய நாளிற் பழக்கமா யிருந்தது.
தம்பதி வாழ்க்கை தப்பா திருக்கவும்
இன்பம் என்பது இருபால் பிறக்கவும்
நிம்மதியும் உறவில் சாந்தி யடையவும்
காமநூல் எழுதிக் கற்றுக் கொடுத்தனர்.
வேதியர் முனிவர் வித்தகர் ஞானிகள்
ஆகிய பலரும் ஆக்கினர் காமநூல்.

அன்பர் இருவர்தம் அந்தரங் கத்தை
வெளியே சொல்லி விளக்குவ தில்லை.
ஆண்மை இல்லாமல் அவஸ்தைப் படுவோன்
ஆசை மிகுந்து அழகிய பெண்ணை
திருமணம் செய்தும் திருப்திசெய் யாமல்
தவிக்க வைப்பதைத் தடுப்பது காமநூல்.

மனமே அன்பு; மனமே சுகமென
ஓராயிரம் முறை உரத்துக் கூறினும்.
உடம்பின் சுகத்தில் உயர்வதே இல்லறம்.
அந்தப் பொருத்தம் அமையா விடிலோ
கணவன், மனைக்குக் கசப்பாய்த் தோன்றி
சம்சா ரம்தினம் சச்சர வாகும்.
பலமில் லாதவர் பலத்தைப் பெறவும்
பள்ளி யறையில் பயிற்சிகள் பெறவும்
வழிகள் பலவாய் வகுப்பது காமநூல்.

அவரவர் உடம்பின் அளவை அறிந்து
அணைத்து ரசித்து அனுபவம் பெற்று
இயற்கை செயற்கை இரண்டு முறையிலும்
இன்பம் பெறுவதை இயம்பும் காமநூல்.

ஆண்குறி வகையின் அளவுகள் மூன்று.
குதிரை, எருது, குதிக்கும் முயலென.
பெண்குறி வகையின் பிரிவுகள் மூன்று.
யானை, குதிரை, அழகிய மானென.
இந்த வகைகள் ஒன்றுக் கொன்று
எதிரெதி ராக இயங்குதல் பற்றி
நன்றாய் அறிந்து நாயகி தன்னை
திருப்தி செய்யத் தெளிவது காமநூல்.
உடற்கூ றுக உரைப்பதே யன்றி
காமக் கூறாய் கனிவதே யல்ல!
வாத்ஸா யனமுனி வகுத்துக் கொடுத்த
காமசூத் திரம்ஓர் காதல் மருத்துவம்.

ஜாதகம் பார்த்துத் தலைவன் தலைவி
திருமணம் பேசும் சிறப்புறு பெற்றோர்
பார்க்கும் பொருத்தம் பலவகை யாயினும்
யோனிப் பொருத்தமும் யோகமும் முக்கியம்.

பன்னூ றாண்டுப் பழக்கமன் றோஇது!
ஆதலின் இதனை அறிவாய்க் கொள்வது
காதல் செய்வோர் கடமையென் றெழுதினேன்.

ஆண்டு பலவாய் ஆசையை வளர்த்து
மணவினை முடித்து மஞ்சம் ஏறிய
மோகக் காதலர் முதல்நாள் இரவே
வெறுத்துப் பிரிந்த விவரம் அறிவேன்.
ஆகவே இதனை அடக்கத் துடனே
விரசமில் லாமல் விளக்கமுன் வந்துளேன்.
இன்ப உறவு இலக்கிய மென்றால்
இந்தச் சூத்திரம் இலக்கண மாகும்.

பாவை ஒருத்தி பருவம் எய்தினால்
அதனை அவளே அறிந்திட முடியும்.
உடலில் இருந்து உதிரம் வெளிப்படும்;
வெடித்தது மொட்டென விவரம் புரியும்.
பையன் எப்போது பருவம் எய்துவன்?
அதற்கோர் நாளை ஆண்டவன் வைத்திலன்!
வெள்ளை உதிரம் வெளிப்படும் நாளே
பிள்ளை வளர்ந்து பெரிதா கும்நாள்.
வெள்ளை உதிரம் என்பதைத் தமிழில்
'விந்து' என்றே விளக்குவோர் பெரியோர்.
'சுக்கிலம்' அதுதான் ஆண்மை சுரப்பது.

'சுரதம்' அதுதான் பெண்மை சுரப்பது.
இரண்டும் ஒன்றாய் இணையும் சுகமே
இல்லற சுகமாய் இயற்கை வைத்தது.
வாலிபன் 'தீர்த்தம்' வளரும் பொழுதே
மங்கையின் 'தீர்த்தமும்' வருமே யானால்
'சமகம்' என்று சாற்றுவர் பெரியோர்.

அந்தச் சுகத்தில் அன்பும் வளரும்;
அடுத்தநாள் பார்த்தால் அழகும் மலரும்.
ஆண்மை சற்றே அவசரப் பட்டு
மனையாள் சுகத்தை மறக்குமே யாகில்
காலையில் அவள்முகம் களையிலா திருக்கும்.
கொண்டவன் மீது கோபமும் பிறக்கும்.
உத்தமப் பெண்இதை உரைப்பதே இல்லை.
ஆயினும் கணவன் அறிவது நன்று.
திருப்தி யடைந்த சேயிழை யாள்தான்
தினமும் கணவனைச் சீராட்டும் மனைவி.

ஆண்மை குறைந்தால் அதற்கு ஏதுவழி?
இதழொடு மார்பு இடையோடு பாதம்
நான்கையும் வருடி நல்லுணர் வூட்டி
உணர்ச்சி யிலேஅவள் உச்ச மடைந்ததும்
புணர்ச்சியி லிறங்கிப் பூரிப் பதுதான்
தளர்ச்சி யிலும்சுகம் தழுவும் ஒருவழி.

கிளர்ச்சிகொள் மனையை கீழ்மே லாக
பலப்பல வகையில் பக்குவப் படுத்திச்
செயல்படும் கணவன் சிறப்புற வாழ்வான்.
இயங்கும் சக்தி மனையாள்; அவளை
இயக்கும் சக்தி கணவன் எனவே
வாத்ஸா யனரும் வழிமுறை கூறினர்.
செயல்படும் கணவன் திறமையைப் பொறுத்தே
ஆட்படும் மனையாள் அன்பும் வளரும்.
உடலின் பத்தில் உழைப்பவன் கணவன்.
உழைப்பில் தானும் உடன்படு பவளே
'மனைவி' என்பது வாத்ஸா யனர்மொழி.

எல்லாம் முடிந்த பின்னும் கூட
பாவை மறுபடி பழக முடியும்.
ஆடவன் நிலைமை அப்படி யல்ல!
வலிமை தீர்ந்தால் மறுபடி சேர
சிலநா ளாகும் திரும்பவும் மகிழ.

ஆதலின் கணவன் அங்கங் கள்தமை
வலிவாய் வைப்பது வாழ்க்கையில் இன்பம்.

பள்ளி அறையில் பாவையைத் தனது
இரண்டு கைகளில் எடுக்கும் அளவு
வாலிபன் தனக்கு வலிமை வேண்டும்.
மனையாள் உடம்பு மலைபோ லிருந்தால்
அதையும் தூக்கும் ஆண்மை வேண்டும்.

முயல்வகை ஆணும் மான்வகைப் பெண்ணும்
முறையாய் இணைந்தால் முழுச்சுகம் கிடைக்கும்.
முயல்வகை ஆடவன் மோகக் குறியது
நான்கு விரற்கடை நீளமி ருக்கும்.
மான்வகைப் பெண்ணின் மயக்கும் பெண்குறி
அதுவும் மேற்படி ஆழ மிருக்கும்.
யோனிப் பொருத்தம் என்பது இதுதான்.

காளை என்பது நடுவகை ஆண்மை.
குதிரை என்பது நடுவகைப் பெண்மை.
ஆழமும் நீளமும் ஆறு விரற்கடை
இரண்டும் சேர்ந்தால் இன்பம் பலவகை.

குதிரை ஆண்குறி எட்டுவி ரற்கடை...
யானை யோனியின் அளவும் அதுவே.
இருவரும் சேர்ந்தால் இணையிலாப் பொருத்தம்.
முயலும் யானையும் முட்டிக் கொள்ளுமேல்
கசப்பே வாழ்வின் கதையாய் முடியும்.
இந்தப் பொருத்தம் எப்படிப் பார்ப்பது?

முதல்வகைப் பெண்ணுடல் 'முல்லை' மணக்கும்.
இரண்டாம் பெண்ணுடல் 'தாமரை' வாசம்.
கடைசிப் பெண்ணுடல் 'கள்ளி'யின் நாற்றம்.
அரக்கப் பெண்ணென அவளை உரைப்பர்.

வாசனை பார்த்தா மனைவியைப் பிடிப்போம்!
யோசனை செய்தால், யோனிப் பொருத்தம்

மருத்துவச் சோதனை வழிதான் புரியும்.
ஆனால் ஒன்று: அதையும் அழகாய்
காம நூல்கள் கழறுதல் கண்டேன்.

உதடு பருத்தவள் ஓங்கிச் சிரிப்பவள்
நிலம் நோக்காது நேரே பார்ப்பவள்
கடைசி வகையாய்க் கருதுதல் நல்லது.

அச்சம் நாணம் அடக்கம் மிகுந்து
கணவன் இட்ட கட்டளைப் பணிந்து
நடப்பாள் இவளென நன்ருய்த் தெரிவது,
முதல்வகைப் பெண்ணின் முகத்தி லிருந்தே,
பார்வையில் தோன்றும் பாவையின் மென்மை.
தேகம் முழுதும் சிதறிக் கிடக்கும்.
தொட்ட உடனே துள்ளிக் குதித்து
பட்ட உடனே பரவச மடைந்து
இட்ட உடனே இயற்கையில் மகிழ்ந்தால்
முற்றும் அவளே முதல்வகை யாவாள்.

எந்த வகையில் எவள்கிடைத் தாலும்
காம சூத்திரக் கணக்கில் அவளை
பரவசப் படுத்தும் பக்குவம் உண்டு.

முத்த மிடுங்கள்; முத்த மிடுங்கால்
இதழில் நாவால் எழுதுங்கள் கவிதை!
நாசியின் அருகே நாசியை வைத்து
முத்த மிடுங்கால் மோகம் பெருகி
கடிக்கா திருப்பது காதலின் நன்மை!

எழிலார் மார்பில் இதழ்களை வைத்து
நாவின் நுனியால் நலம்பெற வருடி
அவளது உடம்பில் அக்கினி வளர்த்தால்
ஓமகுண் டத்தில் ஊற்றிய நெய்போல்
சேயிழை குறியில் சுரதம் சுரக்கும்.
திரவம் சுரந்து சேர்ந்தபின் ஞலே
புணர்ச்சி தொடங்கினுல் போதை பிறக்கும்.
மங்கைக் கும்அதில் வலிஇருக் காது.

தோகை குறியில் சுரோணிதம் சுரக்கும்
காலம் வரைக்கும் கட்டுப் பாடாய்
யோகம் பயின்று உளத்தை அடக்கி
வீரியம் சீக்கிரம் வெளிவா ராமல்
காத்துக் கொண்டு கடைசி நேரத்தில்
அவளும் அவனும் 'அம்மம் மா' என
சமமாய் முடிப்பதே தம்பதி இன்பம்.

கூந்தல் துணியைக் கசக்குதல் போல
மங்கை தனத்தை வலிக்கச் செய்தால்
இன்பம் குறைந்து துன்பம் பெருகும்.
ஆற்றின் நுரையை அள்ளுதல் போல
மார்பை மெதுவாய் வருடுதல் இன்பம்!

நகக்குறி பதிக்கும் நல்லதோர் சுகமும்
பற்குறி பதிக்கும் பயங்கர சுகமும்
வகையாய்ச் சொன்னார் வாத்ஸா யனமுனி.

எவ்வெப் போது நகக்குறி பதிப்பது?
'மோகம் பெருகும் முதல்நாள் இரவில்
வெளியூர் சென்று மீண்டநாள் இரவில்
பயணம் புறப்படும் முதல்நாள் இரவில்
ஊடல் தணிந்து ஓங்கிய நிலையில்
நகக்குறி பதித்தல் நல்லது!' என்றார்.
காணு வேளை கணவனை நினைக்க
நகக்குறி என்பது நகைபோ லமையும்.

நகக்குறி என்பதை நாட்டும் இடங்கள்:
மார்பு, கழுத்து, மங்கையின் இடுப்பு,
முதுகு, தொடைகள், முயங்கும் தோள்கள்!
இவைதா னென இடந்தே டாமல்
இஷ்டப் படிஅதை எங்கும் பதிக்கலாம்.

பற்குறி பதிக்கும் பான்மையும் அஃதான்.
ஆனால் இவற்றை அடிக்கடி பதித்தால்
வெறிபோல் தோன்றும்; விரக்தியில் முடியும்!

முதல்நாள் இரவில் முயங்கும் போது
விளக்கை அணைத்து விடுவது நன்று.
குடும்பப் பெண்ணின் குணமே நாணம்.
விளக்கிருந் தால்உடை விலக்க மறுப்பாள்!
ஆடவன் கோபம் அதனால் பிறக்கும்!
அனுசரிப் பதுதான் அதிலும் நல்வழி.

முதல்நாள் உறவில் முழுநிர் வாணம்
கொள்ளும் படிதன் கோதையை யாரும்
வற்புறுத் தாமல் வளைத்திட வேண்டும்.
காலம் போகக் காலம் போகக்
கூட்டில் சுகத்தைக் காரிகை அறிய
அதன்பின் முலே ஆயிரம் விளக்குகள்
போட்டா லும்அவள் பொறுத்துக் கொள்வாள்!
ஆடை முழுதும் அகற்ற ஒப்புவாள்!

தொந்தி உள்ளவர் சுகம்பெற நினைத்தால்
கட்டிலின் மீதே கையை ஊன்றி
காரியம் செய்வது கனத்த சுகமாம்!
அல்லா தவர்கள் அணங்கின் மீது
சாய்ந்து படுத்துச் சரசம் புரிந்து
நண்டுப் பிடிபோல் நான்கு கால்களும்
சங்கிலிப் பின்னல் சரியாய்ப் போட்டு
முத்தம் கொடுத்து முயங்கி மகிழலாம்!

இன்னவை தவிர, இவைபோல் மேலும்
நின்று கலத்தல், நீட்டிப் படுத்தல்
என்று பலவகை இயம்பினர் முனிவர்.
அவையெல் லாமே அரக்க குணங்கள்!

ஒன்றை மட்டும் உள்ளவா றுரைப்பேன்.
சக்தி யற்றவர் சரச மாடிட
'நாவைக் கொள்'ளென நவின்றார் முனிவர்.
அதனால் மனையாள் அடைவது சுகமாம்!

கேரள முறையில் கீழ் மேலாக
உறவு கொள்வதை உரைத்தார் முனிவர்.
பிரசவித் தவளும் பெருத்த உடலும்
குறுகிய அளவில் குறியுடை யவளும்
அப்படிச் செய்வது ஆகா தென்றார்.
எப்படி யோஇவ் வியக்கம் வாழ்வில்
செப்பரும் சுகத்தைச் சேர்க்கப் பிறந்ததே!

மாத விலக்கை மனைவி யடைந்து
ஐந்து நாட்கள் ஆகும் வரைக்கும்
தொடக் கூடாது; தொட்டால் நோய்வரும்!

உறவில் இன்பம் உயர்ந்திட வேண்டின்
உரைப்பைக் குறைத்து உண்பது நல்லது!
உரைப்புக் குறைத்தால் உணர்ச்சி குறையும்!

''மாதர் போகம் மாதம் இருமுறை''
என்னும் அளவில் இயற்கையாய்த் தோன்றும்.
ஆனல் ஒன்று: அந்த இரவில்
நீண்ட நேரம் நிம்மதி யாக
கூடே ருமல் சுவைத்திட முடியும்.
காரியம் முடிந்து கட்டுத் தளர்ந்து
வீரியம் முழுதும் வெளிப்பட்ட பின்னர்
உடனே எழுந்து ஓடி விடாமல்
ஐந்து நிமிஷம் அவளின் மீதே
மயங்கிக் கிடந்திட மருத்துவம் கூறும்.

புதுமழைத் தண்ணீர் போய்விழும் பொழுது
ஏரியின் மீன்கள் நீரின் வழியே
ஏறித் தெருவினில் ஊர்வது போல
சுக்கில அணுக்கள் சுரோணிதம் ஏறும்;
சுரோணித அணுக்கள் சுக்கிலம் ஏறும்.
இருவரும் அன்று இழந்ததோர் சக்தி
மீண்டும் மலர்ந்து வீரியம் பிறக்கும்.

அதனால் மறுநாள் அறிவும் ஜொலிக்கும்.
முதல்நாள் நினைவு மோகனம் படிக்கும்.
சோம்பல் பறக்கும்; சுறுசுறுப் பிருக்கும்.
ஓடி ஆடிட உற்சா கம்வரும்.

செயற்கை ரப்பர் சேர்த்துச் செய்வது
களையைக் கெடுக்கும் கவலையை வளர்க்கும்.

அதிகக் குழந்தை ஆகா தென்றால்
அறுவை சிகிச்சை ஆக்குதல் நன்று.
சுக்கிலத் துடனே சுரோணிதம் கலப்பதை
தடுப்பதால் உடம்பு சீக்கிரம் தளரும்.
பொங்கிடும் விந்து போய்விழும் போது
வயிற்றுக் குள்ளே வடிப்பது போல
மனைவி உணர்ந்தால் மழலைக்கு அடிக்கல்.
விந்து உடனே வெளியினில் வந்தால்
கருப்பைக் கதவு மூடிய தென்க.

மாத விலக்கை மனைவி யடைந்து
ஏழாம் நாள்முதல் இருபதாம் நாள்வரை
உறவு கொள்வதில் உருப்பெறும் பிள்ளை.
அப்போ தும்அது ஆகிட விலையேல்
கர்ப்ப அணுவே உடம்பினில் இல்லை!

வருடம் பலவாய் மனைவியைப் பிரிந்து
வாழ்ந்தா லும்அவள் வழிதவ றாமல்
தன்னைக் காக்கும் தமிழகப் பெண்மை.
ஆயினும் அவளை அதிககா லங்கள்
பிரியா திருப்பது இல்லற நன்மை.

சிலநாள் பிரிந்து மீண்டும் திரும்பி
ஒருநாள் கலந்து உவந்து மகிழ்ந்து
மறுநாள் பிரிந்தால், வானில் மண்ணில்
கணவன் முகத்தையே கண்டுகொண் டிருப்பாள்!

இன்ப இல்லறம் இணையிலாக் குடும்பம்.
அன்பு பாசம் ஆனந்தம் என
பேறுகள் அனைத்தும் பெற்று மகிழ்ந்திட
வாத்ஸா யனமுனி வழங்கிய சூத்திரம்
சொன்னதை எடுத்துச் சுவையாய்த் தொடுத்து
நானும் கொஞ்சம் நடுவே கலந்து
அனுபவ அறிவை அடங்க விளக்கி
வாலிபர் முன்னே வடித்துவைக் கின்றேன்.
மருத்துவம் போலிதை மாணவர் ஏற்க!
படித்தவர் இதனால் பக்குவம் பெறுக!
மனையாள் உறவையே மாண்புறச் சொன்னேன்
இல்லா உறவுக்கு இது பொருந்தாது!

# மூவகை உறவுகள்

இன்பம் காணும் இருவர் இரவில்
எந்தவே கத்தில் இயங்குவ தென்பதை
வாத்ஸா யனமுனி வகுத்துச் சொல்கிறார்!

வேகம் என்பது மூவகை யாகும்:
மந்த வேகம், மத்திய வேகம்,
சண்ட வேகம் சாற்றினார் முனிவர்!

மந்தவே கத்தில் மன்னவன் இயங்கினால்
மத்திய வேகம் மங்கைக்கு இன்பம்!
அதிலே நேரம் அதிகம் எடுக்கும்!
மந்தவே கத்தில் மணந்தவன் போகையில்
சண்ட வேகத்தில் தாரமும் போனால்
அவளது ஆசை விரைவினில் தீரும்!
மத்திய வேகம் மணந்தவன் கொண்டால்
மந்த வேகமோ சண்ட வேகமோ
இரண்டும் மனைவிக்கு இணையிலாச் சுகமாம்!
சண்டவே கத்தில் தலைவன் தொடுத்தால்
மந்தம் மத்தியம் தலைவியின் இன்பம்!

சண்ட வேகம் கொண்டவன் யாராம்?
கண்மண் தெரியாக் கலவி நடத்தும்
அன்னவன் மிகுந்த ஆசை படைத்தவன்
மனைவியை அடிக்கடி மஞ்சத்துக் கழைப்பவன்
தொடர்ந்தே அவளைத் தொல்லை செய்பவன்.

சண்ட வேகத் தாரம் எப்படி?
பொங்கும் உறவில் பூரண இன்பம்
அடையா தவள்போல் அடிக்கடி நினைப்பவள்

மூன்றும் வகையென உரைப்பது பொருந்தும்!
மத்திய வேகம் மயக்கம் நிறைந்தது.
கிள்ளும் மனைவியின் கிளர்ச்சியைப் பொறுத்து
அவளது பற்குறி அதனையும் பொறுத்து!
மகிழும் குணமே மத்திய வேகம்!
அளவில் மீறிய ஆசை யுடையவன்
விந்து நிறைய வெளிப்படும் உடலோன்
இருமுறை யாவது இயங்கும் குணத்தவன்
நடுவே கத்து நாயகன் என்பார்!
நடுவே கத்து நாயகி நிலையும்
இவ்வா றேதான் என்றார் முனிவர்!


மந்தம் என்பது தாமச குணமாம்!
காம உறவைக் கடமைஎன் றெண்ணி
கலவிப் போதில் கனிவாய் நடப்பவன்
மந்தவே கத்து மணாளன் என்க!
நீத்துப் போன சுக்கிலம் நிறைந்தவன்
பற்குறி கண்டு பயந்து குதிப்பவன்
நகக்குறி கண்டு நடுங்கும் மனிதன்
தொட்ட வுடனே தோல்வியும் அடைவான்!
ஆனால் இவனோ அடுத்தொரு கலவி
அன்றே நடந்தால் ஆனந்தம் தருவான்!
சாத்திரம் சொல்லும் சரித்திரம் இப்படி!

நாகரீகத்தில் நற்பெரும் வழிகள்.
விஞ்ஞா னத்தால் விரிவடைந் துள்ளன!

# பகுதி மூன்று

## ஸ்ரீ ஆதிசங்கரர் வடமொழியில் இயற்றிய

# மதுரைத்திங்கல் சாரம்



ஆயிரம் ஆயிரம் ஆண்டுக ளாக
வடமொழி நூலார் வழிவழி வகுத்த
'மதன கமம்' எனும் மன்மதக் கலையை
மதன நூலென வரிசைப் படுத்தி
வடமொழி தனிலே வகுத்தான் ஒருவன்
ஆதிசங் கரரே அதனைச் செய்ததாய்
நூலின் தலைப்பு நுவலுதல் கண்டேன்
அதனைத் தமிழில் ஆக்கித் தருகிறேன்.

## நூல் வரலாறு

பரமன் ஒருநாள் பார்வதி தனக்கு
காமநூல் தனைக் கனிந்துரை செய்ததை
நந்தி தேவர் நயம்படத் தெரிந்து
அன்பா லுதித்த சனற்குமா ரன்எனும்
முனிவன் தனக்கு முன்னின் றுணர்த்தினர்
நன்னூல் அதுவே 'நந்திகேஸ் வரியம்'
சனற்குமா ரன்அதில் தத்துவம் விரித்து
பல்வகைப் பெண்மையைப் பாகம் பிரித்து
கலவியும் புலவியும் களிவா யுரைத்து
விரிந்தநூ லாக்கி விரிவுரை வகுத்தார்.
சனற்குமா ரர்செய்த தத்துவ நூலை
'சனற்குமா ரம்'எனச் சாற்றுவர் பெரியோர்.
பாப்ருவி கள்அச் சனற்குமா ரத்தை
கற்றுத் தேர்ந்து சுருக்காய் வடித்து
தம்கள் பெயரால் தந்துசென் றார்கள்
ஸ்வேதகேது அதைச் சொன்னான் முதலில்
பலநாள் அதுதான் பாடமா யிருந்தது.

ஆண்டுகள் பலவும் ஆனபின் னாலே
வழிவழி வந்த வாத்ஸா யனமுனி
காமக் கலையின் கரையையே கண்டு
'காமசூத் திரம்'எனக் கட்டிக் கொடுத்தார்.

பின்னர் பலரதைப் பிளந்தும் வளர்த்தும்
அனுபவ அறிவை அதற்குள் இணைத்தும்
மன்மத லீலையின் மகிமையை உணர்த்தினர்.
அதன்பின் னாலே அவர்மொழி கற்ற
'கொக்கோகன்' எனும் கோமுனி ஒருவன்
'கொக்கோ கம்'எனப் பேரும் கொடுத்து
வடநூல் ஒன்றை வடிவாய்ப் படைத்தான்.
பாண்டிய நாட்டுப் பதிப்பினைப் பின்னால்

அஸ்தம் அனுஷம் திரையோடு ரோகிணி
அஸ்வினி மிருக சீரிஷம்இவை நாலில்
பிறந்த பெண்களே முனித்தத்து வங்களாம்!

பூசம் அத்தத்தோடு சுவாதி விசாகம்
ஆயில் யத்தினில் அவதரித் தவர்கள்
மானுடத் துவப்பென நவின்றது மதனநூல்.

[illegible]வதி அவிட்டம் சதயம் மூன்றிலும்
உதித்த பெண்மையே கந்தர்வ தத்துவம்.

பூரம் மூலம் ரேவதிப் பிறப்புக்கள்
பூத தத்துவப் பெண்களென் றறைக!

சித்திரை மகத்தொடு பரணியில் பிறந்த
இத்தகு பெண்கள் இயக்கிதத் துவமாம்.

கார்த்திகை கேட்டை பூரட்டாதி
அவிட்டப்பிறப்பு அரக்கியதத் துவம்

புனர்பூ சத்தோடு பூசம்உத் திராடம்
பிறந்த பெண்களே பிசாசுத் தத்துவம்!

## தெய்வ தத்துவ லட்சணம்

வில்போல் புருவம் வேல்போல், கண்கள்;
நிறைதயா நெஞ்சம்; சிவந்த மேனி;
அன்னம் போல அழகிய மென்நடை;
கருணை மிகுந்த கீழ்க்கண் பார்வை;
சித்திர இடையோடு சிவந்த பாதம்;
இளகிய வதனம், இனியதோர் பேச்சு;
கலவிப் புணர்ச்சியில் கலக்கம்; அச்சம்;
மயக்கக் கலவியில் மட்டிலா ஆசை;
மெலிவும் இன்றி வீக்கமும் இன்றி
அளவோ டிருக்கும் அழகிய உடலாள்—
தெய்வ தத்துவப் பெண்ணெனச் செப்பினர்.

ஆண்டவன் ஒருவன் அதிவீர ராமன்
கொக்கோ கம்தனைக் கொடுத்தான் தமிழில்.

அன்னான் அதனை ஆக்கிடும் முன்பே
சண்மதத் தலைவர் சங்கராச் சாரியார்
மதனநூல் என்னும் மாண்புறு பெயரில்
வடமொழியில் இதை வடித்துக் கொடுத்தார்.
அதனைப் பலபேர் ஆக்கினர் தமிழில்
அடியேன் சுருக்கிஇங் களிக்கின் றேனே.

## தத்துவ லட்சணம்

இப்பே ருலகில் இயங்கும் பெண்கள்
எத்தனை வகையென இதுவரை அறியோம்!
எட்டு வகையென இயல்பினை உணர்த்தி
தத்துவ பேதம் சரியாய் உரைத்து
அவர்களைப் பற்றிய அளவை விளக்கி
எவ்வெம் மகளிரை எவ்வெவ் வேளையில்
கலத்தல் சரிஎனக் காட்டினர் சங்கரர்!

தெய்வ தத்துவம் முனிதத் துவமுடன்
நாக தத்துவம் கந்தர்வ தத்துவம்
பூத தத்துவம் இயக்கிய தத்துவம்
அரக்கிய தத்துவம் பிசாசு தத்துவம்
இவையே பெண்களின் எட்டுத் தத்துவம்!

## நாள்

உத்திரம் அனுஷம் ஓணம் இவற்றோடு
உத்திரட் டாதிஎன் றுரைத்திடும் நான்கு
நட்சத் திரங்களில் தோன்றிய நங்கையர்
தெய்வ தத்துவச் சேயிழை யார்களாம்!

அஸ்வினி திருவாதிரையோடு ரோகிணி
அனுஷம் மிருகசீரிஷம்இவை நான்கில்
பிறந்த பெண்களே முனிதத்து வங்களாம்!

பூசம் அஸ்தத்தோடு சுவாதி விசாகம்
புவியில் பாரதனில் அவதரித் தவர்கள்
மானுடத் துவம்என நவின்றது மதநூல்.

ரேவதி அவிட்டம் சதயம் மூன்றிலும்
உதித்த பெண்மையே கந்தர்வ தத்துவம்.

பூரம் மூலம் ரேவதிப் பிறப்புக்கள்
பூத தத்துவப் பெண்களென் றறைநக!

சித்திரை மகத்தொடு பரணியில் பிறந்த
இத்தகு பெண்கள் இயக்கிதத் துவமாம்.

கார்த்திகை கேட்டை பூரட்டாதி
அவிட்டப்பிறப்பு அரக்கியதத் துவம்

புனர்பூ சத்தோடு பூசம்உத் திராடம்
பிறந்த பெண்களே பிசாசுத் தத்துவம்!

## தெய்வ தத்துவ லட்சணம்

வில்போல் புருவம் வேல்போல் கண்கள்;
விதையா நெஞ்சம்; சிவந்த மேனி;
அன்னம் போல அழகிய மென்நடை;
இருபுடை பிதுங்கு கீழ்க்கண் பார்வை;
சித்திர இடையோடு சிவந்த பாதம்;
இளகிய வதனம், இனியதோர் பேச்சு;
கலவிப் புணர்ச்சியில் கலக்கம்; அச்சம்;
மயக்கக் கலவியில் மட்டிலா ஆசை;
மெலிவும் இன்றி வீக்கமும் இன்றி
அளவோ டிருக்கும் அழகிய உடலாள்—
தெய்வ தத்துவப் பெண்ணெனச் செப்பினர்.

# நட்சத்திரங்கள்

## உத்திரம்

சித்திரம் போலச் சிவந்து கிடக்கும்
சிறிய மேனியும் சிறுமுழங் கையும்.
மலர்ப்பா தத்தில் மச்சமி ருக்கும்!
கொத்து மலரைக் கூந்தல் விரும்பும்;
தான்கொண்ட கொள்கையில் தவறவே
மாட்டாள்
குறைநிறை அனைத்தையும் குறிப்பால் அறிவாள்.
உத்தம நட்த்ரைத் உள்ள தெய்வதம்
உத்திர நாளில் பிறந்தவள்! உணர்க!

## அனுஷம்

தாமரைப் பூப்போல் தழைந்த முகமும்
நீண்ட மூக்கும் உயர்ந்த கண்களும்
பூரித்த கொங்கையும் புதுமலர் மணமும்
தத்தைபோல் சொல்லும் சுத்த முடைமையும்
மனமகிழ் அன்பும் உடைய தெய்வதம்
அனுஷ நாளில் பிறந்தவள், அறிக!

## திருவோணம்

சிவந்த மேனியும் செல்வமும் கூடி
பலனில் லாதசொல் பாராட் டாமையும்
ஆழ்ந்த அறிவும் அன்பும் நிறைந்து
சினங்கொண் டாலும் சீக்கிரம் தணிந்து
நாயகன் தனையே நாடிடும் தெய்வதம்
திருவோ ணத்தில் பிறந்தவள், தெளிக!

## உத்திரட்டாதி

பட்டியல் தூண்போல் பருத்த தொடையும்
ஒன்றையும் விரும்பி ஓடாத குணமும்

மழலைப் பேச்சும் மலர்போல் பாதமும்
அழகிய கணைக்கால், அளவுள்ள உடம்பும்
கபாநன் தனையே நயக்கும் அன்பும்
கள்ளங் கபடம் கடுகள வின்றி
மௌனத் திறந்து வார்த்தைகள் வீசும்
உத்தமத் தெய்வதம் உத்திரட் டாதி
நாளில் பிறந்த நன்மகள், அறிக!

## இவர்கள் ஆசைகள்

வெந்நீரில் குளிக்க விரும்புவர் இவர்கள்.
வெள்ளைப் பூ, ஆடை விரும்பியே அணிவர்!
அகில்மணம் பரப்பும் அழகிய மாலையை
அணியத் துடிப்பார்; அம்மலர் விரும்புவர்.
பாலும் நெய்யுமே பருகும் குணத்தவர்!
நான்மேல் கூறிய நான்கு நட்சத்ரங்களில்
பிறந்த தெய்வதப் பெண்களின் ஆசைகள்
இவைதான்; இவரை எப்படிக் கலப்பது?

சந்தனம், வெண்ணெய், பச்சைக் கற்பூரம்,
மூன்று இவற்றைப் பொருந்த எடுத்து
சமமென யாக்கிச் சாறாய் அரைத்து,
தேமைகயின் கணவன் தோள்களில் பூசி
அவனைக் கலந்தால் ஆயுள் முழுதும்
அவனை எண்ணியே அன்னவள் வாழ்வாள்.

குன்றி மணிவிதை கொஞ்சம் எடுத்து,
தாய்முலைப் பாலில் அரைத்துக் குழப்பி,
அரிதா ரம்தனை அதிலே சேர்த்து,
ஆண்குறி தன்னில் அளவுடன் பூசி
கிழக்கு முகமாய் அவளைக் கிடத்திக்
கலந்தால் அவளது காதல் வளரும்!

பெண்தலை கிழக்கில் ஆண்தலை மேற்கில்
பேசித் தழுவி பிணைத்து அணைத்து

இதழைச் சுவைத்து இருவர் உடலும்
இரண்டறக் கலக்கும் இன்பம் தன்னை
'பவமக் கரணம்' என்றது வடநூல்!

அழகிய பெண்ணை அருகே வைத்து
மயக்கும் மொழிகள் வசனம் பேசி
உள்ளங் காலை உரசித் தடவி
உள்ளங் கையை கண்களில் உரசி
மகிழ்ச்சி யூட்டி மயங்கச் செய்து
உச்சியில் வைத்து மெச்சிப் புகழ்ந்து
புணரும் சுகத்தைப் புகலும் வடசொல்
'வியாபட கரணம்'; விளக்கமாய் அறிக!

சிவந்த மேனித் தெய்வ ஆத்துவை
பெண்களை மணந்து பெறும்பே ரின்பம்
பலவகை யாகப் பகன்றது மதன நூல்!
முழங்கை யூன்றி முழங்கா லூன்றி
அணைத்துக் கலக்கும் 'அஞ்சலி கரணம்',
எடுத்தே யணைத்து இதழைக் கடித்து
அன்புடன் கலக்கும் 'அபூர்வ கரணம்'..

விளங்கும் கூந்தலை விரலால் தடவி
உச்சி முகர்ந்து உடலம் சுவைத்து
அங்கம் தடவி ஆலிங் கனித்து
நாடும் இன்பமாம் 'நாகனை கரணம்!'

கையையும் காலையும் கண்களில் ஒத்தி
செல்வப் பெருக்கைச் சிறப்பாய்க் கூறி
இதமாய்ப் பேசி பொதுவாய்ப் பிடித்து
வியக்கும் கரணம் 'விரிஅவா கரணம்!'
என்னப் பலவாய் இயம்பும் காமநூல்!

வளரும் பிள்ளைகள் வாழ்வினை எண்ணி
அதனைக் குறைவாய் ஆக்கிக் காட்டினேன்..

# முளிதத்துவ லட்சணம்

முளிதத்துவப் பெண்ணின் கால்கள் இரண்டும் சமமாக இருக்கும். உட்கார்ந்து எழும் போது பளிச்சென்று எழுந்திருக்கும். வேல் போன்ற கண்கள் — மெல்லிய கொடிபோன்ற சாயல். காதலுக்கு அழைக்கும் போது அச்சத்தோடு ஆசை மிகுந்து, வெட்கப் பட்டு நடந்து வருவாள். சிவந்த நிறமுடைய இவள் ஒரு வகை.

குயில் போன்ற மேனி — நிலவு போன்ற முகம் — அடிக்கடி குளிக்கும் சுத்தமாக இருப்பதிலே ஆசை. பளிங்குபோல் அழகாக மேல்நோக்கிய கொங்கை. பளபளவென்றிருக்கும் இடை. காந்தள் மலர் போன்ற கைவிரல். நீண்ட கழுத்து. ஆடவன் மீது அளவற்ற இச்சை — இவள் ஒரு வகை.

[illegible] போல் மேனி— திரட்சி மிக்க தோள்கள். உருண்ட தொடைகள். கொவ்வைக் கனி போன்ற இதழ்; குமிழ மலர் போன்ற மூக்கு. வளைந்த வில்போல் புருவம். மான் போன்ற கண்கள். தாமரை மொட்டுப் போல் கொங்கை. — இவள் ஒரு வகை.

சிவந்த வாய் — சிவந்த கை — குவிந்த முலை — சுருண்ட கூந்தல், உண்மையும் நன்மையுமுள்ள விஷயங்களையே பேசுவது. பூஜை செய்வதில் அதிக ஆசை — இவள் ஒருவகை.

பருத்த சரீரம், இளநீர் போன்ற கொங்கை, மனநிலையில், கலவியில் அதிகமான நாட்டம், தாமரை போன்ற கை, சந்திர ஒளி படைத்த முகம் — இவள் ஒருவகை.

அதிக உயரம், அளந்து பேசுவது, அழகான புன்னகை. அந்த அழகை அதிகரிக்கும் கோபம், பெரியோரை வணங்குதல், சாமி கும்பிட்டு விட்டுச் சாப்பிடுதல் — இது ஒருவகை.

இந்த வகைகளில் அஸ்த நட்சத்திரம், மிருகசீரிஷம், திருவாதிரை, ரோகிணி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த பெண்கள் அடங்குவார்கள்.

## அஸ்வினி நட்சத்திரம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண், புளிப்போடு கூடிய உணவுகளை உண்ண விரும்புவாள். நல்ல விஷயங்களையே பேசு வாள். இவள் பிறந்த இடத்திலும், புகுந்த இடத்திலும் செல்வம் கொழிக்கும். நல்ல குணம் படைத்தவள். தாமரை மொட்டுப் போல கொங்கை இருக்கும். வளமான பரந்த கண்கள் இருக்கும். மற்றவர்களைப் பற்றிப் புகழ்ந்தே பேசுவாள்.

## மிருக சீரிஷம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவள், கருத்துப் பெருத்த வயிறு உடையவள். கருணை இல்லாதவள். சிறுகச் சோறு கூடப்போட மாட்டாள். வீட்டில் அமைதியாக அடக்கமாக இருக்க மாட் டாள். அடிக்கடி வெளியே நடப்பாள். அறிமுகமானவர்களிடம் மெல்லப் பேசுவாள். புளிப்பு மிகவும் பிடிக்கும். கொங்கைகள் மிகவும் பெரிதாக, தோள் வரையில் உருண்டிருக்கும்.

## திருவாதிரை

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவளுக்கு மறைவிடத்தில் ரோமம் அதிகமாய் நிறைந்திருக்கும். ஆனால் அன்பு வருபவர் களுக்கு உபகாரம் செய்வாள். அழகாகச் சுத்தமாக இருப்பாள். புருஷனுக்கு நல்லதையே செய்வாள். இவள் பேசினால் கேட்டுக் கொண்டே இருக்கலாம். ஆனால், ஆழமான மனம் உடையவள்.

## ரோகிணி

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவளின் உடம்பு மாசு மருவில் லாமல் சுத்தமாக இருக்கும். ஆனால் கடுமையான கோபக் காரி. காடுகளிலும், பூந்தோட்டங்களிலும் சுற்றியலை ஆசைப் படுவாள். தன் கணவனைவிட மற்றவர்களைச் சேருவதையே விரும்புவாள். யாரிடமும் நிலையான அன்பிருக்காது. காமம் நிறைந்தவள். மிகப் பெரிய பால் செம்பு போல் கொங்கை இருக்கும்.

## இஷ்குவாது ஆசைகள்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த முனிதத்துவப் பெண்கள் சிவப்புச் சேலை கட்டுவதையே அதிகம் விரும்புவார்கள். இனிப்பு

அதிகம் சாப்பிடுவார்கள். காலைப் பொழுதில் உறங்குவார்கள். நல்ல குணம் உடையவர்கள். சென்டு பூசிக் கொள்வதில் ஆசை உடையவர்கள். தனது கணவனோடு தனியாகவே வாழ விரும்புவார்கள்.

## அவர்களோடு இணையும் முறை

திப்பிலி, கீழ்வாய் நெல்லி, சிறியா நங்கை, அல்கோஷ்டம், தாய்ப் பால் இவற்றை சம அளவு சேர்த்து கீழ்வாய் நெல்லிச் சாறில் அரைத்து உடம்பிலே பூசிக் கொண்டு, ஒரு முனித்தத்துவப் பெண்ணுடன் மாலை ஆறு மணியில் இருந்து எட்டு மணிக்குள் உறவு கொள்ள வேண்டும்.

இவளைக் கவர்வதற்கு எட்டு வகையான முறைகள் உண்டு. ஏற்கெனவே சொல்லப்பட்ட வகைகள் தான் அவை என்பதால், அவற்றை விளக்காமல் விடுகிறேன்.

## நாக தத்துவ லட்சணம்

நீண்ட விரல்கள், உயர்ந்த தோற்றம், மிகச்சிறிய இடை, தென்னங் குரும்பை போன்ற கொங்கை, குமிழ மலர் போன்ற நாசி, சிவந்த வாய், தளர்ந்த நடை, சுழல்கின்ற கண் பார்வை உடையவள் ஒருவகை.

அழகான அக்குள், பளபளப்பான தோளும், கையும், சரீரமும் — இவை அனைத்தும் ஒரே அளவில் இருக்கும். ஆனால் மர்மக் குறி பெரிதாக இருக்கும். மருண்டு மருண்டு தரையைப் பார்த்து நடக்கும் இவள், மற்றொரு வகை.

சத்தம் இல்லாத மழலைச் சொல், வீட்டுக்குப் பயப்படாத குணம், நாணமில்லாத போக்கு, வளைந்த கழுத்து, நீண்ட கூந்தல், டக் டக்கென்று நடக்கும் நடை, எல்லோரிடத்தும் சகஜமாகப் பழகுதல், அதிகம் பொய்களைப் பேசுதல் ஆகிய குணங்களைக் கொண்ட இவள், ஒரு வகை.

அளவு கடந்த தூக்கம், அடிக்கடி சோம்பல், கொட்டாவி, ஒரு கணம் கூட ஓரிடத்தில் நில்லாது அங்கும் இங்கும் ஓடுவதும் குதிப்பதுமாக இருக்கும் இவள், மற்றொரு வகை.

இந்த நரகத் தத்துவப் பெண் என்பவள் எந்தெந்த நட்சத்திரங்களில் பிறக்கிறார்கள்?

சுவாதி,

விசாகம்,

ஆயில்யம்,

பூராடம்

—என்கிறது மதன நூல்.

## சுவாதி

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண், நல்ல வாளிப்பான உடம்பும், பளபளப்பான கை, கால்களும், தோளும், உடையவளாக இருப்பாள். மார்பு உருண்டு உயர்ந்திருக்கும். மீன் சாப்பிடுவதில் அதிக ஆசை உள்ளவளாக இருப்பாள்.

## விசாகம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவளுடைய கை நீண்டிருக்கும். கொங்கைகள் விம்மிக்கொண்டிருக்கும். தட்டிவிட்டபின் மீண்டும் அதே இடத்தில் வந்து, பந்து போல் நிற்கும். கால்களும் நீண்டிருக்கும். உடம்பும் கனமாக இருக்கும். ஆனால் ஒருவரிடமும் நிலையான அன்பு வைக்க மாட்டாள். ஒருவருக்கும் நன்மை செய்ய மாட்டாள். கோள் மூட்டுவாள். முடிச்சுப் போடுவாள். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு மாதிரி பேசுவாள்.

## ஆயில்யம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண், யாருக்கும் அடங்க மாட்டாள். எப்படிப்பட்ட கணவனும் திருப்தி செய்ய முடியாது. கருணை இல்லாத சுபாவம். தினமும் பெருமை பேசிக் கொண்டிருப்பாள். உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதே இவள் குணம். கற்பை இழப்பதற்கு அஞ்ச மாட்டாள். நல்ல ஆடவனைக் காணும் போதெல்லாம் இவள் உடம்பில் மாறுதல் ஏற்படும்.

# பூராடம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணின் மேற்பாதம் மலிந்திருக்கும். தொடைகள் பருத்திருக்கும். கால் விரல்கள் குறுகிருக்கும். கண்கள் அங்கும் இங்கும் சுற்றிக்கொண்டிருக்கும். ...சுவல், நூல் போன்ற இடை இருக்கும்; பால் போன்றமொழி இருக்கும்.

## இவர்களது ஆசைகள்

கருப்புப் புடவை கட்டுதல், பாற்சாதம் தயிற்சாதம், மோர்ச் ...நம் சாப்பிடுதல்; மஞ்சள் பூசுதல், சந்தன வாடை, இருவாட்சி மலர் சூடுதல், நாயகனோடு சமமாகக் கலவியிலே கலந்து கொள் ...தல்.

## இவர்களைச் சேருவது எப்படி?

சந்தனம், அகில், நன்னாரிவேர், முத்தக்காசு, விலமிச்சை வேர், இருவேலி இவற்றைச் சம அளவில் தாமரைப் பூவின் சாற்றில் அரைத்து புனுகு, கற்பூரம் சேர்த்து கலவன் பூசிக் கொண்டால், நரக தத்துவப் பெண் மயங்கிக் கிடப்பாள்.

## நரக தத்துவ லட்சணம்

ஒரு கொங்கை சிறுத்திருக்கும்; ஒரு கொங்கை பெருத்திருக்கும். அப்பளம், முறுக்கு போன்றவற்றை அதிகம் விரும்பிச் சாப்பிடுவாள். கட்டிப் பிடிக்கிற மாதிரி எல்லோர் பக்கத்திலும் சென்று பேசுவாள். கூந்தலில் நல்ல வாசனை இருக்கும். நின்று எழுவாள்; போவாள்; வருவாள், கையை நெறித்துக் கொள்வாள் — இவள் ஒருவகை.

வாசம் உள்ள மலர்களைச் சூடுவாள். நீண்ட கூந்தல். நீண்ட கண்கள். உயர்ந்த சரீரம். தென்னங் குரும்பை போன்ற கொங்கை. தாமரை இதழ் போன்ற அல்குல். பெரிய தொடை. கனமான உடம்பு. பெண் யானை போல நடை. இனிக்கஇனிக்கப் பேசும் பேச்சு — இவள் ஒருவகை.

குறுகிய நெற்றி உடையவள், வளைந்த புருவம் உடையவள். கிளியைப் போல் பேசுவாள், செவ்விள நீர் போல் கொங்கை

இருக்கும். யாரிடத்தும் கண்டிப்பாக இருப்பாள். தன்னிடம் அன்பு வைப்பவர்களுக்கு நன்றி உள்ளவளாக இருப்பாள். காரம் கறியோடு நெய்யும், பாலும் சேர்த்து உண்பதை அதிகம் விரும்புவாள். இவள் ஒருவகை.

இந்த காந்தர்வ தத்துவப் பெண் எந்தெந்த நட்சத்திரங்களில் பிறக்கிறாள்?

அஸ்வினி,

அவிட்டம்,

சதயம்—

என்கிறது மதன நூல்.

## அஸ்வினி

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு, கைக்கு அடங்காமல் கொங்கை இருக்கும். குளிர்ச்சியான முகம் இருக்கும். வாய் செக்கச் செவேலென்றிருக்கும். கூந்தல் நீளமாகவும், அடர்த்தியாயும் சுருள் சுருளாகவும் இருக்கும். கைகால்கள் பஞ்சு மாதிரி மென்மையாக இருக்கும். கரும்புச் சாறு போன்ற வார்த்தைகள் வரும். கணவனிடத்தில் உயிரையே வைத்திருப்பார்கள். இவள் சிரித்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம். பல் வரிசை அவ்வளவு அழகாக இருக்கும்.

## அவிட்டம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு முகத்திலே [illegible] இருக்கும். இனிமையாகப் பேசுவாள். பெண்மையின் எல்லா குணங்களும் இருக்கும். ஆனால் உடம்பு மட்டும் பருத்திருக்கும். கொஞ்சம் பெருமைக்காரி. தன்னிடத்தில் உண்மையோடிருப்பவர்கள், உறவினர்கள், இவர்களோடு விரும்பிக் கலந்து வாழ்வாள்; விரும்பி உபசரித்து மகிழ்வாள். 'அம்மா பசி' என்று யாராவது கேட்டால் சட்டியோடு தூக்கிக் கொடுத்து விடுவாள்.

## சதயம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண் நெருங்கி நீண்ட புருவம் உடையவளாக இருப்பாள். கண்கள் வேல் போல் இருக்கும்.

...ங்கை பருத்திருக்கும். பெண்ணுக்கு மானம் வேண்டும், ...ள்ளமை வேண்டும் என்று அடிக்க பேசுவாள். நல்ல புத்திமதி ...களைப் போதிப்பாள். கணவன் ஆண்மை குறைந்தவனாக இருந்...தாலும் அவனைப் பலப்படுத்தி விடுவாள். கணவனுடனே நீண்ட ...நேரம் கலவி செய்வாள். தானும் மகிழ்ந்து அவனையும் மகிழ...வைக்கும் சக்தி இயற்கையாகவே உண்டு.

## இவர்களது ஆசைகள்

இடையிலே ஒட்டியாணம், பளபளவென்றிருக்கும் மேகலை ஆகியவற்றை அணிய ஆசைப்படுவார்கள். பிச்சிப் பூவை அடிக்கடி சூடுவார்கள். சந்தன வாடை, அகில், சாம்பிராணி சடவாஞ்சி வாசனை அதிகம் பிடிக்கும். நயமான கவிதைகளை ரசித்துக் கேட்பார்கள். புளிப்பான பதார்த்தங்களையே விரும்பிச் சாப்பிடுவார்கள்.

## இவர்களைச் சேர்வது எப்படி?

கற்பூரம், புனுகு, சந்தனம், அகில் சடவாஞ்சி, நன்னாரி, முத்துக்காசு ஒரிதழ்த் தாமரையின் வேர், பேய்ச் சுரைக்காயின் தோல், குன்றிமணி வேர், இவற்றைச் சம எடையில் சேர்த்து அரைத்து கணவன் தன் உடம்பிலே பூசிக்கொண்டு உறவு கொண்டால், காந்தர்வ தத்துவப் பெண் அப்படியே மயங்கிக் கிடப்பாள்.

## பூத தத்துவ லட்சணம்

பருத்த நீல, உதட்டையும் மீறி வெளியே வந்திருக்கும் பல், பூரித்த கொங்கை, கனமான உடம்பு, விசாலமான கண்கள், அளவு கடந்த உணவு, கருத்துத் தடித்த வளைந்த கை கால்கள், பொறுமையே இல்லாத இந்த ஜென்மம், ஒருவகை.

சந்தோஷம் வரும்போதும் துக்கம் வரும் போதும் பக்கத்தில் யாரிருந்தாலும் கட்டிப் பிடித்துக் கொள்வது, பெண்களோடு அழுத்துக் கொண்டு சத்தம் போட்டுச் சண்டை போடுவது, ஆண்-பெண் உறவில் ஆசை கையைக் கடித்துக் கொள்வது, இல்லாமலிருப்பது, எங்கே எதைக் கண்டாலும் திருடுவது, மேலுக்கு நயமாகப் பேசுவது, கணவனுக்குக் கூட சோறு போடாமல் இருப்பது, விடிய விடியப் பொய் சொல்வது.

இப்படிப் பட்ட குணங்களைக் கொண்ட தடித்த குரலுடையவள், மற்றொரு வகை.

பருத்த கண்கள், உயர்ந்த குதிகால்கள், குட்டையான கால்கள், கனமான சரீரம், வெளுத்து உயர்ந்த பல், குறுகிய வாய், சத்தம் போட்டுப் பேசுதல், அளவுக்கு மேல் சாப்பிடுதல், கவலைப் படாமல் இருத்தல், எந்தப் பெண்ணோடும் நட்பு பாராட்டாத குணம்—இவள், ஒருவகை.

இந்த பூததத்துவப் பெண்கள் எந்தெந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்களாம்?

மூலம்,

ரேவதி,

பூரம்——

என்கிறது மதன நூல்.

## மூலம்

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்குத் தலைமயிர் அதிகம் வளராது; குட்டையாக இருக்கும். பார்க்க அழகாக அளவுக்கு நிரம்பவண்டமான கொங்கைகள் இருக்கும். நடப்பவள் தளர்வாகப் பேசுவாள். உயர்ந்தவர்களிலிருந்து வேலைக்காரர்கள் வரை வேற்றுமை இல்லாமல் பழகுவாள். சொந்தக்காரர்களிடமும் புருஷனிடமும் கொஞ்சம் கூட அன்பு வைக்க மாட்டாள். ஒரு முறையும் இல்லாமல் நடந்து கொள்வாள்.

## ரேவதி

அகன்ற கண்கள், உடலுறவு செய்யும் போது கண்ணை மூடியிருக்கும் குணம், கனத்த சரீரம். எதையும் யோசிக்காமல் பேசிவிடும் சுபாவம். கணவனிடம் காதலற்ற போக்கு. இவற்றோடு நீண்ட காலம் கரிய கூந்தலுடன் காணப்படுவாள், இவள்.

## பூரம்

இவளது குதிகால் உயர்ந்திருக்கும். முழங்கால் நீண்டிருக்கும். கூந்தல் பாதத்தைத் தொடும். குடிப்பழக்கத்தைச் சீக்கிரம் கற்றுக் கொள்வாள். புறம் பேசுவாள்.

## இவர்களது ஆசைகள்

இவர்கள் சிவப்பு கறுப்பு வண்ணங்களில் உள்ள சேலைகளை விரும்புவார்கள். சந்தன வாடை, செவ்வந்திப் பூ, தாழம்பூ, மல்லிப்பூ ஆகியவற்றை அதிகம் விரும்புவார்கள். உணவிலே மாமிசம், மீன்வகைகள், நெய், பால் ஆகியவற்றை அதிகம் சேர்த்துக் கொள்வார்கள்.

## இவர்களைச் சேர்வது எப்படி?

ஊமத்தம்பூ, கஸ்தூரி, சந்தனம், நன்னாரிவேர், நத்தைச் சூரிவேர், சுழல் வெண்டி, அகில் கட்டை, கோஷ்டம், புனுகு இவற்றைச் சம எடையில் அரைத்துப் பூசிக் கொண்டு இந்தத் தத்துவப் பெண்ணுடன் சேர வேண்டும்.

## அக்கினி தத்துவ லட்சணம்

இந்தத் தத்துவப் பெண்களில் ஒரு வகையினள், தூங்குவாள். தூங்கிக் கொண்டே இருப்பாள். உயரமாகத் தடித்த உடம்பு கொண்டிருப்பாள். சிடுசிடுவென்று எரிந்து விழுவாள். கைவிரல் நீண்டிருக்கும்.

மற்றொரு வகையினள், அழகில்லாமல் இருப்பாள். ஆனால், தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றுவாள். அகன்ற முகம், விசாலமான கண்கள், ஆத்திரம் கொண்ட பார்வைகள் நிறைந்தவளாக இருப்பாள். பற்கள் வெளியே தெரியும். மாதத்துக்கு வேண்டுமா இரு நிதியில் ஒரு நிதியும் இல்லாமல் இருப்பாள்.

மூன்றாம் வகையினளுக்கு, வாசம் உள்ள கூந்தல், இருக்கும். அதிலே வண்டொலிக்கும். இவள் மாதவிடாய் முடிவில் செய்யும் குணங்களை அறிவாள். பல்வரிசை முத்து போலிருக்கும். இதழ் பவளம் போலிருக்கும். புறங்கையுள்ளவள், முறுக்கையும் கையும் பின்புறம் குறுகி இருக்கும். அடிக்கடி கோபம் வரும்.

இந்த அக்கினி தத்துவ பெண் எந்தெந்த நட்சத்திரங்களில் பிறந்தவளாம்?

கிருத்திகை,

மகம்.

பரணி—

—என்கிறது மதன நூல்.

## சித்திரை

இந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணுக்கு நுண்ணிடை, முல்லைப் பற்கள், சிறிய சிறியநெற்றி, பவள வாய், படித்தோரிடம் அன்பு, கைப்பொருள் அதிகம் இருக்காது. தயவு தாட்சண்யம் காட்டமாட்டாள். ஆனால், அண்டியவர் பால் அன்பு வைப்பாள். நாயகன் செய்யும் லீலைகளுக்கெல்லாம் நிர்வாணமாக நின்று ஒத்துழைப்பாள்.

## மகம்

இவள் தனக்கு வேண்டியவர்களைப் பற்றி பெருமையாக எண்ணுவாள். அவர்கள் காலால் இட்ட வேலையை, தலையால் செய்து முடிப்பாள். அவர்களிடம் குற்றம் பாராட்ட மாட்டாள்; குணம் கண்டால், கூடி வாழ்வாள். இவளது நடை, கண்டவர்களை மயக்கும் நடையாக இருக்கும். மன்மதனும் மயங்கத் தக்க அழகி.

## பரணி

கறுப்போ சிவப்போ, இவள் வடிவம் ஒழுங்காக இருக்கும். உறவினர்களைக் காப்பாற்றுவாள். ஆனால், கலவி ஆசை மிகுந்து கணவனை வற்புறுத்தி திருட்டுக் கலவி செய்வாள். கணவன் சக்தி வாய்ந்தவனாக இருந்தால், அவன் செய்யும் கடுமையான லீலைகளை எல்லாம் ஆசையோடு ஏற்றுக் கொள்வாள்.

## இவர்களது ஆசைகள்

செண்பகம், முல்லை, பிச்சி ஆகிய மலர்களைச் சூட விரும்புவார்கள். சந்தன வாடை பிடிக்கும். குளிர்ச்சியான உணவு வகைகளை ருசிப்பார்கள். நீல நிறத்து ஆடைகளையே விரும்புவார்கள். அதிகம் பெண்களையே கட்டித் தழுவுவார்கள். உலகத்திலுள்ள அதிசயங்களை எல்லாம் காண விரும்புவார்கள். மற்றவர்களை மதிக்க மாட்டார்கள்.

## இவர்களைச் சேருவது எப்படி?

நாகப் பாம்பின் பித்தை எடுத்துக் காய வைத்து, காக்கை காலை வெட்டிப் போட்டு, எட்டிக் காயைப் பொடி செய்து, பாகற்காய் சாறு, அல்லது பேய்க் கரும்புச் சாறு விட்டு அரைத்து பிறகு பச்சைக் கற்பூரத்தையும் சேர்த்து மறுபடி அரைத்து உடம்பிலே தடவிக் கொண்டு இயக்கிப் பெண்ணைக் கலந்தால், அவள், மயங்கிக் கிடப்பாள்.

## அக்னி தத்துவ லட்சணம்

இந்தத் தத்துவப் பெண்களில் ஒரு வகையினள் எதற்கெடுத்தாலும் சிரிப்பாள். ஆணவத்தோடு நடப்பாள். இதம், சுகிர்தம் இல்லாமல் பேசுவாள். உயர்ந்த உருவம் படைத்தவளாக இருப்பாள். பகையின் வலிமை தெரிந்தாலும் பயப்படமாட்டாள். யாருக்குக் கொடுமை செய்தாலும் இவள் பொறுக்க மாட்டாள்.

மற்றொரு வகையினள், நீண்டு பருத்த கை கால்களை உடையவள். விம்மி நிற்கும் கொங்கை படைத்தவள். வில் போன்ற புருவம் கொண்டவள். உயர்ந்த நெற்றியும் நேர் பார்வையும் கொண்டவள். கடுமையான உரத்த குரல். ஆடவர்களைத் தேடித் தேடி ஓடுவாள். கலவியின் போது ஆடவனுக்குக் களைப்பு ஏற்பட்டுச் சோர்ந்து விட்டால், அந்தக் கோபத்தை உடனே காட்டிக் கொள்வாள். கொஞ்சம் கூடக் கூச்சம் இருக்காது. எதிலும் எச்சரிக்கையாக நடக்க விரும்புவாள். யாரையும் சீக்கிரம் பிடித்துக் கொள்வாள்.

மூன்றாம் வகையினள்: இதழ் கருத்து, உடல் பெருத்து குதிரை போல் நடப்பாள். கொங்கைகளும் இருபுறமும் சாய்ந்திருக்கும். புருவம் வில் போல் இருக்கும் நெற்றி உயர்ந்திருக்கும். இடை கனத்திருக்கும். கொடிப் பாசி போல கூந்தல் இருக்கும். குளறிக் குளறிப் பேச்சு வரும். காலும் விரலும் மெலிந்திருக்கும். தாளாத காமம் ததும்பி நிற்கும். அச்சம், நாணம் இருக்காது. ஆனந்த லீலைக்குக் கணவனை அடிக்கடி அழைப்பாள். இரவில் விழித்துக் கொண்டே படுத்திருப்பாள்.

இந்த அக்னி தத்துவப் பெண்கள் எந்தெந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்களாம்?

கார்த்திகை,

கேட்டை,

பூரட்டாதி

—என்கிறது மதன நூல்.

### கார்த்திகை

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவள், கருணை, அன்பில்லாதவள். சுலபத்தில் சோரம் போவாள். தினமும் புதுப் புது ஆடவரை விரும்புவாள். இடையைப் பிடித்துக் கலவி செய்

வோரிடம் மிகுந்த ஆசைப் படுவாள். கரிய நிறம் கொண்டிருப்பாள்.

## கேட்டை

இவளது கூந்தல் நெருக்கமாக நீண்டு கறுத்து இருக்கும். ஆனால் எப்போதுமே சந்தோஷமாகக் காணப்பட மாட்டாள். சபலம் அதிகம். யாரையும் முகத்துக்கு முன்னே புகழ்வாள்; முதுகுக்குப் பின்னே இகழ்வாள்.

## பூராடம்

இந்த நட்சத்திரப் பெண், யாரிடத்தும் நிலையான ஆசை வைக்க மாட்டாள். தோள்கள் கனமாக இருக்கும். கொங்கை பருத்திருக்கும். ஊருக்கோ, உறவுக்கோ அஞ்ச மாட்டாள். வெட்கம் என்பது இவளது வீட்டுப் பக்கமே வராது.

## இவர்களது ஆசைகள்

இவர்கள், தாழம்பூ, செண்பகப் பூ, பிச்சிப் பூ, சந்தனம், புனுகு, கஸ்தூரி, சாம்பிராணிப் புகை, மாமிசம், பால் இவற்றில் ஆசை உடையவர்கள். நல்ல உணவு எங்கு கிடைத்தாலும் விட மாட்டார்கள்.

## இவர்களைச் சேருவது எப்படி?

சந்தனம், அகில், யானை வணங்கி, முள்ளி, அல்லி, குங்குமக் காவ, விளாமிச்சை வேர் இவற்றை அரைத்து, ஊமத்தம் பூவைச் சேர்த்துப் பூசிக் கொண்டு அரக்கி தத்துவப் பெண்ணைச் சேர்ந்தால் அவள் மயங்கிக் கிடப்பாள்.

## பிசாச தத்துவ லட்சணம்

பிசாச தத்துவப் பெண்களில் ஒருவகை, பல்லைக் காட்டிச் சாப்பிடுவாள். பசி அதிகம். பொறுமை கெடும். சொன்ன சொல் கேளாது. சண்டை போட்டு, பின்தான் சாப்பிடும். உதைக்க அடிமைதான் சேலை உயர்த்திப் பார்க்கும். அடிக்கடி பல்லைக் கடிக்கும். பொல்லாத பேச்சு பேசும்.

மற்றொரு வகை, நீண்ட மூக்கும் முகமும் உடையது. குரல் நெகிழ்ந்து கொண்டிருக்கும். பல்லும், நாக்கும், கண்ணும் புருவமும் சிறுத்திருக்கும். கொங்கை நீளமாக இருக்கும். குதிகாலும் அப்படியே.

வோரிடம் மிகுந்த ஆசைப் படுவாள். கரிய நிறம் கொண்டிருப்பாள்.

## கேட்டை

இவளது கூந்தல் நெருக்கமாக நீண்டு கறுத்து இருக்கும். ஆனால் எப்போதுமே சந்தோஷமாகக் காணப்பட மாட்டாள். சபலம் அதிகம். யாரையும் முகத்துக்கு முன்னே புகழ்வாள்; முதுகுக்குப் பின்னே இகழ்வாள்.

## பூரட்டாதி

இந்த நட்சத்திரப் பெண், யாரிடத்தும் நிலையான ஆசை வைக்க மாட்டாள். தோள்கள் கனமாக இருக்கும். கொங்கை பருத்திருக்கும். ஊருக்கோ, உறவுக்கோ அஞ்ச மாட்டாள். வெட்கம் என்பது இவளது வீட்டுப் பக்கமே வராது.

## இவர்களது ஆசைகள்

இவர்கள், தாழம்பூ, செண்பகப் பூ, பிச்சிப் பூ, சந்தனம், புனுகு, கஸ்தூரி, சாம்பிராணிப் புகை, மாமிசம், பால் இவைகளில் ஆசை உடையவர்கள். நல்ல உணவு எங்கு கிடைத்தாலும் விட மாட்டார்கள்.

## இவர்களைச் சேருவது எப்படி?

சந்தனம், அகில், யானை வணங்கி, முள்ளி, அல்லி, குங்குமம், கோஷ்டம், விளாமிச்சை வேர் இவற்றை அரைத்து, உடம்பெங்கும் பூசிச் சேர்த்துப் புகைக் கொண்டு அரக்கி தத்துவப் பெண்ணைச் சேர்ந்தால் அவள் மயங்கிக் கிடப்பாள்.

## பிசாச தத்துவ லட்சணம்

பிசாச தத்துவப் பெண்களில் ஒருவகை, பல்லைக் காட்டிச் சிரிப்பவள். பயம் அறியாப் பெருமை பேசும். சொன்ன சொல் கேளாது. கண்டதை போட்ட பின்தான் சாப்பிடும். உதைக்க அலைவதைப் போல உற்றுப் பார்க்கும். அடிக்கடி பல்லைக் கடிக்கும். பொல்லாத பேயைப் போல் பேசும்.

மற்றொரு வகை, நீண்ட மூக்கும் முகமும் உடையது. குரல் நெகிழ்ந்து கொண்டிருக்கும். பல்லும், நாக்கும், கண்ணும் புருவமும் சிறுத்திருக்கும். கொங்கை நீளமாக இருக்கும். குதிகாலும் அப்படியே.

## இணங்கலைச் சேருவது எப்படி?

தாழை, ஆமணக்கு, நன்னாரிவேர், முத்தக் காசு, அலரி, சடாமாஞ்சி, அவுரி இவற்றின் வேர்களை, புனுகு சந்தனம், செண்பகப்பூ சேர்த்து அரைத்து உடம்பில் தடவிக் கொண்டு கலந்தால், பிசாசு தத்துவப் பெண் மயங்கிக் கிடப்பாளாம்.

## தத்துவ முடிவுரை

மேற் கூறிய படி எட்டு வகைப் பெண்மைத் தத்துவங்களை விவரித்திருக்கிறார் முனிவர். ஒவ்வொரு தத்துவத்திற்கும் பொது லட்சணம் சொல்லும் போது ஒரே உருவத்தையே அவர் வருணித்திருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் நான் அதை மூன்று வகையாகப் பிரித்திருக்கிறேன்.

இங்குப் பொது லட்சணம் ஒரே ஒரு வகையாக இருக்குமானால் சில வருணனைகள் மாறி மாறி வர முடியாதென்பதால் அப்படிப் பிரித்தேன்.

மூன்றையும் சேர்த்து ஒரு வகையாகவே படித்துப் பார்க்கலாம்.

அடுத்து, பொதுத் தத்துவத்தை விவரித்து விட்டு, ஒவ்வொரு நட்சத்திரப் பெண்ணுக்கும் வரும் போது பொதுத் தத்துவத்தில் இருந்து நட்சத்திர குணம் மாறு படுவதைக் காண்பீர்கள்.

முதலில் சொல்லப் படுவது தத்துவம் தான். நட்சத்திரத்தில் சொல்லப் படுவது தான், பெண்மையின் இலக்கணம்.

ஒவ்வொரு நட்சத்திரப் பிறப்புக்கும் ஒவ்வொரு சுபாவம் இருக்கிறது. ஆனால் பொதுவான குணங்களும் இருக்கின்றன.

இது ஒரு பெண்மை இலக்கண நூல் என்று சொல்வது பொருந்தும்.

எந்த நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணை மணந்து கொள்ளலாம் என்பதைக் கண்டு பிடிக்கலாம்.

அவர்களுக்கு விருப்பமான பொருள்களைச் சொல்லும் அதே எட்டாம் நூற்றாண்டு விருப்பங்களையே இதில் சொல்லி இருக்கிறார் முனிவர். அந்தப் பொருள்களுக்குச் சமமான சுவையையும், மணத்தையும் இன்று பல பெண்கள் பயன் படுத்துகிறார்கள். அதனைக் கருத்தில் கொள்ளவும்.

அடுத்து இன்னின்ன பொருள்களைச் சேர்த்து அரைத்து உடம்பில் பூசிக் கொள்ளவும் என்று வருகின்ற இடங்கள் கவனத்திற்கு உரியவை.

வடமொழி மதன நூலிலிருந்து இவை அப்படியே தரப் படுகின்றன.

இவை என்னென்ன மூலிகைகள் என்பதையும், இந்த முறை சரிதானா என்பதையும் சித்த வைத்தியர்களைக் கேட்டுத் தெளிக.

ஒவ்வொரு தத்துவப் பெண்ணோடும் எந்தெந்த வகையான கலவிகள் செய்யலாம் என்பதை மதனநூல் விவரிக்கின்றது. தெய்வ தத்துவப் பெண்ணில் மட்டும் அதை நான் தெளிவாகச் சொல்லி இருக்கிறேன்.

கலவி வகைகள் என்பன, கல்யாணம் ஆன பின்னர் நடைபெற வேண்டிய சேட்டைகள்.

இளம் பருவத்திலேயே ஒரு 'பெர்வெர்ஷன்' ஏற்பட்டு விடாமல் இருக்க அவற்றை விட்டு விட்டேன்.

வாத்ஸ்யாயனரின் காம சூத்திரத்தில் கூட நியாயமான கலவி முறைகளை மட்டுமே எடுத்துத் தந்திருக்கிறேன். அவையே போதும் என்று கருதுகிறேன்.

இந்த மதன நூலை எழுதியவர் ஸ்ரீ ஆதி சங்கரர் என்று வடமொழி நூலிலும், 102 வருஷங்களுக்கு முன் பதிப்பிக்கப் பட்ட ஒரு தமிழ் நூலிலும் காணப் படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது எனக்குத் தெரியாது.

உண்மையோ பொய்யோ இன்றைய இந்துக்கள் ஆதி சங்கரர் காம நூல் எழுதியதாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

காசி ராஜனின் உடலில் புகுந்து கொண்டு — அதாவது கூடு விட்டுக் கூடு பாய்ந்து — ஆதி சங்கரர் தன் ஆண்மையை நிரூபித்ததாகக் கூறப் படும் கதைக்கும் இதற்கும் தொடர் பிருப்பதாக ஒரு புத்தகத்து முன்னுரை கூறுகிறது.

தனக்குச் சவால் விட்ட மீமாம்சகரின் மனைவி சரச வாணிக்குப் போதித்ததாகவும் கூறப்படுகிறது.


எப்படியோ, இந்த நூல் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்பது உறுதி.

பெண்ணைத் தேர்ந்தெடுக்கும் இளைஞனுக்கு வழிகாட்ட மட்டுமே, இதை நான் பயன்படுத்திக் கொண்டேன்.

கொக்கோக நூல் விளக்கம் முற்றிற்று.

# பகுதி நான்கு

# பத்தினி இலக்கணம்



## பத்தினி இலக்கணம்

கொழுநன் உண்டபின் தானுணும்
கொள்கையும்
விழிதுயின்றபின் துஞ்சலும் மென்துயில்
எழுநன் முன்னர் எழுந்துசெய் செல்வமும்
கழிகொள் பாவையிற் கற்புடை மங்கையே.

—அதாவது கணவன் உண்ட பிறகு தான் உண்ணுவதும், அவன் தூங்கிய பிறகு தான் தூங்குவதும், அவன் எழும் முன்பே தான் எழுவதும், செய்ய வேண்டிய வீட்டு வேலைகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பதும் ஆகிய குணங்கள் எவளிடம் உள்ளனவோ அவளே கற்புடைய இல்லத்தரசி.

உரலில் அம்மியில் ஓங்கும் உலக்கையின்
அரணில் வாயிற் படியில் முறத்தினில்
திருஅகன் றிடுமென்று அவை சேர்கிலாள்
பொருவில் நூல் கற்ற புண்ணிய மங்கையே!

அதாவது கற்புடைய பெண், உரலிலோ, அம்மியிலோ, மெத்திலோ உட்கார மாட்டாள். அவற்றைக் காலால் மிதிக்கவும் மாட்டாள். அப்படிச் செய்கின்ற பெண் எங்கே இருக்கிறாளோ, அங்கே செல்வம் இருக்காது.

## சேரக்கூடாத பெண்

காலதில் ரோமம் மல்கி
கடுகிய நடையா ளாகி
மாலது கொண்ட கண்ணும்
வலப்புறம் மருவும் பெற்றே
நீலமாய் உதடும் நாவும்
நீண்டுடல் கருத்து நின்றால்
சாலவே இவளை யாரும்
தழுவிடின் ஆவி போமே!

—ஒரு வகையான பெண். அவளைத் தழுவினால் மனிதன் இறக்கவே வேண்டி வருமாம்! யாரவள்? எப்படி இருப்பாள்?

கால் முழுதும் ரோமம் இருக்கும். அவசர அவசரமாக நடப்பாள். கண் மயங்கி மயங்கிச் சுழலும், வலது பக்கத்தில் ஒரு மச்சம் இருக்கும். உதடு நீண்டிருக்கும். உடல் கருத்திருக்கும். இத்தகைய பெண்ணைத் தழுவினால் மரணம் உறுதி.

## சேரக்கூடாத நாட்கள்

திங்களில் திங்கள் மூன்றுள்
ஜென்மநாள் அமா வாசை
மங்கையர் மூன்று நாளும்
வரும்பிறை உதித்த நாளும்
பொங்கிய ஏகா தசி
பூவையைப் புணர்வா ராகில்
அங்கமும் கருத்து மேனி
ஆருயிர் இழப்பார் தாமே!

—இந்த விருத்தத்தை ஒவ்வொரு கிரகஸ்தனும் பாடம் செய்து கொள்ள வேண்டும். எந்தெந்த நேரங்களில் மனைவியோடு கலக்கக்கூடாதென்பதற்கு இது ஒரு செம்மையான பாடம்.

இது வெறும் தத்துவம் அன்று; விஞ்ஞான மருத்துவத்துக்கு உட்பட்டது.

இதன் பொருளாவது.

மாதத்தின் முதல் தேதி, கணவன் மனைவியின் பிறந்தநாள், அமாவாசை, மனைவி மாத விலக்காகி மூன்று நாட்கள் வரை, மூன்றாம் பிறை நாள்; ஏகாதசி—இந்த நாட்களில் எவ்வளவு ஆசை இருந்தாலும் மனைவியோடு கலந்தால், உடல் கருத்துப் போய் நீலம் பாய்ந்து விடும். இனந்தெரியாத நோய் வரும். நியாயம் இல்லாத மரணம் வரும். குடும்பஸ்தர்கள் இதை கவனத்தில் கொள்ளவும்.

## வஞ்சக மனைவி

ஒரு மனைவி வஞ்சகம் செய்யக் கூடியவளாக, கணவனை மருந்து வைத்து வசியம் செய்பவளாக இருக்க முடியுமா? முடியும். அப்படிப் பல கதைகளைக் கேட்டிருக்கிறோம். அவள் செய்யும் வசியம், மனது வசியமல்ல; உடல் வசியம். வஞ்சகம் என்பது சுற்றத் தவறுதலல்ல; உறவினரை விட்டுக் கணவனைப் பிரித்தல். அப்படி வசியம் செய்யக் கூடிய பெண் எப்படி இருப்பாள்?


நாக்குவாய் கரியா ளேனும்
நரம்பிரு கையா ளேனும்
மூக்கது நெடுமை காட்டி
முன்னுயர்ந் திருக்கு மேனும்
நோக்கரும் புருவம் கூடி
நுடங்கினும் சுழிக்கு மேனும்
போக்குடன் செய்வாள் வேண்டி
புக்கிடப் பொடிசெய் வாளே!

—நாக்கும், வாயும் கருத்திருக்கிறதா? அவள் வசிய மருந்து போடக் கூடியவளே. கையில் நரம்பு தெரிகிறதா? அவளும் அப்படியே. மூக்கு நீண்டிருக்கிறதா? நுனி மூக்கு உயர்ந்திருக்கிறதா? புருவம் கூடியிருக்கிறதா? புருவக் கடைசியில் சுழி இருக்கிறதா? — இவற்றில் ஏதேனும் ஒன்று இருந்தால் கூட, அவள் கணவனிடம் சாகசம் செய்வாள், மருந்து வைப்பாள், வசியப் படுத்துவாள்.

# பகுதி ஐந்து

# மகாகுணா பாடம்

# பெண் மலடு-காரணங்கள்



பெண் மலடு — காரணங்கள்

1

கணவன் மனைவி கலந்திடும் நாளில்
கலவிநே ரந்தோ கலவி முடிந்தோ
தலைவி தனக்குத் தலைவலி வந்தால்
பாவை கருக்குழி பாசி படிந்து
விளக்கயில் வாமல் விளங்குமென் றறிந்து
அடியில் உளபடி அருமருந் திடுக!

'கோழியின் பித்து' கொள்ளுக ஒன்று
தராசில் நிறுத்துத் தக்க எடைக்கு
'பருத்திப் பருப்'பையும் நிறுத்துப் போடுக
சமனை இரண்டையும் ஜலம்விட் டரைக்க

[illegible] விலக்கை மங்கை யடைந்து
நன்னீ ராடும் நாளதில் இருந்து
மூன்று தினங்கள் பெண்குறி உள்ளும்
வெளியிலும் தடவி விட்டபின் னாலே
தலைவனும் குறியில் தடவிக் கொண்டு
கலவிசெய் தால்அவள் கர்ப்பந் தரிப்பாள்..

பக்குவம் முதலில் பலிக்கா திருந்தால்
மூன்றுமா தங்கள் முறை முறையாக
மாதம் மும்முறை மருந்தைத் தடவி
கலந்தால் மங்கையின் கர்ப்பம் உறுதி.


2

கணவன் மனைவி கலந்திடும் போது
உத்தமி தனக்கு உடம்பு முழுவதும்
வலியெடுத் தால்அது வாயுவென் றறிக!
கருக்குழி தன்னில் கட்டிய வாயுவை
அகற்ற ஓர்வழி அளித்தது வடநூல்:

இரண்டு வராகன் எடையள வாக
எள்ளிற் பிறந்த எண்ணெய் எடுத்து
பெருங்கா யத்தில் சிறிதள வெடுத்து
எண்ணெ யிலதனைச் சேர்த்து அரைத்து
'புடவைத் திரி'யைப் போட்டு நனைத்து
மூன்று துணியாய் முறையாய்த் திரித்து
நன்னீ ராடிய நாளி லிருந்து
ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திரியை
பூவை குறியில் புகுத்திவைப் பதுடன்
தலைவன் தானும் தடவிக் கொண்டு
கலவிசெய் தாலவள் கர்ப்பம் தரிப்பாள்.

3

கணவன் மனைவி கலந்திடும் போது
நேரிழை தனக்கு நெஞ்சு வலித்தால்



கருக்குழி தன்னில் சதைவளர்ந் ததென்று
மனதில் அறிந்து மருத்துவம் செய்க!

'திப்பிலி' வராகன் எடையில் ஒன்று
ஆடன் வராகன் எடையில் ஒன்று
கோழிப் பித்து கொள்ளுக ஒன்று
மூன்றையும் அரைத்து முன்னே கூறிய
படியே தடவிப் பள்ளியி லமருக!

4

கணவன் மனைவி கலந்திடும் போது
நாயகி தமக்கு முதுகு வலித்தால்
கீழ்க்கருக் குழியில் கிருமிஉண் டென்று
மனதில் அறிந்து மருத்துவம் செய்க:
'இந்து உப்பு' ஒருவரா கன்எடை

அரிதா ரம்அதும் அதேஅ ளவிலே
பெருங்கா யம்அதும் அதேஅளவா கஎடை
விளங்க எடுத்து வெந்நீரில் அரைத்து
முன்னே கூறிய முறையின் படியே
தடவிக் கொண்டு தலைவியும் தலைவனும்
உறவுகொண் டாலே உருப்பெறும் கர்ப்பம்

5

கணவன் மனைவி கலந்திடும் போது
காரிகை தனக்குக் கண்டைச் சதையில்
உள்வலி எடுத்தால் உஷ்ணம் அதிகம்.

கடுக்காய்த் தோல்இரு வராகன் எடையும்
கஸ்தூரி நான்கு வராகன் எடையும்
மிளகு வீசம் வராகன் எடையும்
முறையாய் அரைத்து மூன்றுருண்டை யாக்கி
ஒருநாள் மட்டும் உள்ளே அருந்தி
குங்குமப் பூஅதி மதுரம்நற் சீரகம்
வகைக்கு ஒவ்வொன்றும் வராகன் எடையில்
பக்குவம் சேர்த்துப் பன்னீரில் அரைத்து
முன்னே சொல்லிய முறைப்படி யாக
உள்ளும் புறமும் ஒழுங்காய்த் தடவி
கலவிசெய் தாலவள் கர்ப்பம் தரிப்பாள்!

6

கணவன் மனைவி கலந்திடும் போது
இன்ப நாயகி ஏப்பம் விட்டால்
கோதை கருக்குழி குளிர்ச்சி யடைந்தது
எனவே எண்ணி இப்படிச் செய்க:

கடுக்காய்த் தோலிலும் சவுக்கா ரத்திலும்
நவசா ரத்திலும் சமஎடை எடுத்து
சேர்த்து அரைத்து சேலையில் நனைத்து
உத்தமி குழியின் உள்ளே திணித்து

[illegible]குண பாட[illegible]ஒரு வழிநூல்
[illegible]நூல் சொற்படி பெண்வகை நான்கு:
பாலை, தருணி, பிரவிடை, விருத்தை!
பாலைப் பருவம் பதினெட்டு வரையில்;
[illegible]ாகனைத் தருணி முப்பது வரையில்;
ஏறிய பிரவிடை ஐம்பது வரையில்;
ஐம்பதைக் கடந்தால் அவள்பேர் விருத்தை.

பாலைப் பெண்ணுடன் பள்ளியி லிருந்தால்
உடம்பில் சிறிது உஷ்ணம் பிறக்கும்.
உண்ணும் உணவின் அளவுகள் உயரும்.
சோம்பிய முகமும் சுறுசுறுப் படையும்.
அழகு கொழிக்கும் வலிமை பிறக்கும்.

பாலைப் பெண்ணைப் பள்ளியில் கூடும்
மாதமும் கூறும் மகாகுண பாடம்:
ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை
நான்குமா தங்கள் நயக்கத் தக்கவை
பாலைப் பெண்ணுடன் பழகத் தக்கவை;

தருணி என்பது குமரியைக் குறிக்கும்.
குமரிப் பெண்ணுடன் கூடி மகிழ்ந்தால்
ஐம்புல னடையும் அளவிலா இன்பம்!
வாதமும் பித்தமும் வாரா திருக்கும்
நாடித் துடிப்பும் நன்றாய் இருக்கும்.

குமரிப் பெண்ணைக் கூடுமா தங்கள்
மார்கழி, தையுடன், மாசி பங்குனி
வகையாய்ச் சொன்னது மகாகுண பாடம்.

பிரவிடைப் பெண்ணுடன் பேசி மகிழ்ந்தால்
காம உணர்ச்சி கடல்மடை யாகும்!
நல்லவை யதனில் ஞானம் பிறக்கும்.

பேசி முடித்ததும் பெருந்தீனி கேட்கும்;
நாடித் துடிப்பும் நன்றாய் இருக்கும்.

பிரவிடைப் பெண்ணுடன் பேசுமா தங்கள்
சித்திரை யுடனே வைகாசித் திங்கள்;
ஆவணி யுடனே புரட்டாசி மாவனே.

விருத்தைப் பெண்ணை விரும்பி நடந்தால்
இறுத்தை கூடத் திறமை இழக்கும்!
சோம்பல், களைப்பு, தூக்கம் பிறக்கும்.
களித்த முகமும் களைகெட்டுப் போகும்!

வண்ணத் தமிழில் பேதை, பெதும்பை,
மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை,
பேரிளம் பெண்மையைப் பிரித்துச் சொல்வார்!
மகாகுண பாடம் வகுத்த முறைதான்
அடியேன் முன்னே விரித்த பாடம்.

இறுதி யாகவே எச்சரிக் கைதனை
மகாகுண பாடம் வகுத்துச் சொன்னது.

கூடிய இருவர் கூடிப் பிரிந்து
தூங்கும் பொழுதில் தொட்டும் கட்டியும்
பக்கம் பக்கமாய் படுக்க லாகாது!
தனித் தனியாகத் தூரமே பிரிந்து
உறங்கு வதேதான் உடம்புக்கு நல்லது!

குடும்ப சூத்திரம்
முற்றிற்று.

**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை